# தொண்டன்




மார்ச்

4-50

1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொண்டன்


மார்ச் - 1989

மலர்: 21 இதழ்: 01



ஆசிரியர் :

கிங்ஸ்லி றொபட்

இணை ஆசிரியர் :

மலர்வேந்தன்

ஆசிரியர் குழு :

எஸ். லோகநாதன்

ஏ. ஜி. இராஜேந்திரம்



வெளியீடு :

சமூகத் தொடர்பு நிலையம்,
திரி./மட். மறை மாவட்டம்.

தொடர்பு :

சமூகத் தொடர்பு நிலையம்,
அ. பெ. எண்: 44,
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. Box - 44,
BATTICALOA.

விலை :

தனிப்பிரதி ரூபா 4/50
ஆண்டுச் சந்தா ரூபா 50/-


## உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | எமது குரல் ... | 1 |
| 2. | திருச்சபை வாழ்வில்... ... | 2 |
| 3. | கி. பி. 20ம் நூற்றுண்டில் | 4 |
| 4. | கவிதை ... | 9 |
| 5. | மட்டுநகரின் கலை இலக்கிய... | 10 |
| 6. | எல்லாம் நிறைவேறிற்று ... | 13 |
| 7. | இளைஞர் அரங்கம் ... | 15 |
| 8. | மாணவர் பக்கம் ... | 18 |
| 9. | நூல் விமர்சனம் ... | 21 |
| 10. | இலக்கியத்தின் உருவமும்... | 23 |
| 11. | தொடர் கதை ... | 25 |
| 12. | விவிலியப் புதிர் ... | 29 |



வெளிவந்துவிட்டது !

நாவண்ணனின்

**பயணம் தொடர்கின்றது**

நாவல்

- இலங்கைத் தமிழர்களின் ஒரு காலகட்டத்து அரசியல் போராட்டத்தைப் பின்னணியாகக் கொண்டது.
- விலை ரூபா 25/- தபாற் செலவு ரூபா 2/-
- இது ஒரு தொண்டன் வெளியீடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எமது குரல்....

வருது... வருது... தேர்தல் வருது...... என்று எதிர்பார்க்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல், அதைத் தொடர்ந்துவந்த பொதுத் தேர்தல் அனைத்தும் நடந்து முடிந்துவிட்டன. தேர்தல் பற்றி பல்வேறு வகையான அபிப்பிராய பேதங்கள் இருப்பினும் இலங்கை — இந்திய அரசுகள் எப்படியோ தேர்தலை நடத்தி முடித்துவிட்டன.

நடைபெற்ற தேர்தல் மூலம் ஜனநாயகம் இங்கு நிலைநாட்டப்பட்டுவிட்டது என்றும், மக்கள் அதிக அளவில் (?) பங்குபற்றி ஜனநாயகத்தின் பால் தங்களுக்குள்ள ஆவலை வெளிப்படுத்தி இருக்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது. ஆனால் தேர்தல்களுக்கு முன்னும் பின்னும் நடைபெற்ற — நடைபெற்றுக்கொண்டிருக்கிற சம்பவங்கள், தேர்தலை நடாத்தி வைத்த உத்தியோகத்தர்களே குறிப்பிடும் அளவுக்கு தேர்தலில் இடம்பெற்றதாகக் கூறப்படும் தில்லு முல்லுகள், இந்நாட்டில் ஜனநாயகம் — தேர்தல்கள் ஒரு கேலிக்கூத்தாகி வருவதையே காட்டுகின்றன. சுதந்திரமான வாக்களிப்பு என்பது நமது நாட்டைவிட்டுத் தூரச் சென்றுகொண்டிருப்பதாகவே எமக்குத் தோன்றுகிறது. இத்தேர்தல்களால் ஜனநாயகம் வளர்ந்துவிட்டது என்றோ, அமைதி திரும்பிவிட்டது என்றோ நாம் பெருமைப் படமுடியுமா?

ஒருகாலத்தில் வடக்கு — கிழக்கில்தான் வன்முறைகள் இடம் பெறுகின்றன என்று கூறப்பட்டது. ஆனால் இன்று நாடு முழுவதுமே வன்முறைகளே வாழ்க்கையாகிவிட்டன. இதற்கு வழி சமைத்தவர்கள் யார்? வெறுமனே தீயசக்திகள், பயங்கரவாதிகள் என்று பட்டை நாமம் சாத்திவிடுவதால் இவைகள் ஒழியப்போவதில்லை. இவற்றுக்கான அடிப்படைக் காரணங்களை இனங்கண்டு நீதியான — துணிச்சலான தீர்வுகள் காணப்படாத வரை எதையுமே நாம் சாதித்து விட்டதாகப் பெருமைப்படமுடியாது.
தவக்காலம் மனமாற்றத்தின் காலம். வாழ்க்கை மாற மனம் மாறவேண்டும்.

— ஆயுத நம்பிக்கைகளிலிருந்து நாம் மனம் மாறவேண்டும்.
— அதிகார, பதவி மோகங்களிலிருந்து மனம் மாறவேண்டும்.
— குறுகிய இனவாதங்களிலிருந்து மனம்மாற வேண்டும்.
— பழிவாங்கும் வெறியிலிருந்து மனம் மாறவேண்டும்.
— அன்புக்கு, நீதிக்கு, மன்னிப்புக்கு, மனிதாபிமானத்துக்கு மனம்மாறினால் வாழ்க்கை சிறக்க வாய்ப்புண்டு. அது எப்போது?

- ஆசிரியர்.




மனித உருவில் தோன்றி,
சிலுவைச் சாவையே
ஏற்கும் அளவுக்கு
கீழ்ப்படிபவரானார்.

பிலிப்; 2/8




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திருச்சபை வாழ்வில் தவக்காலம்

❀ A. J. இரத்தினம்
போதகர்.

இயற்கையிலே பற்பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதைக்கண்டு அனுபவிக்கும் மனிதனின் வாழ்விலும், மனப்பான்மையிலும் எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. மனிதன், அறிவிலும், பொருளாதார, தொழில் வளர்ச்சியிலும், நாகரீக முன்னேற்றத்திலும் வெற்றிநடை போடுகிறான். நம் தாயாம் திருச்சபையும் - தம் மக்களை முன்



னேற்றப் பாதையில், காலத்திற்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப அழைத்துச் செல்லுகிறாள். எனவே இத்தவக்காலத்தில், நம் வாழ்வுப் பயணங்கள் பற்றி சிந்திப்போம்.

தவக்காலம் என்றவுடன் நமது எண்ணங்களில், சிந்தனைகளில் எழுவது என்ன? விபூதிப் புதன், வெள்ளி விரதங்கள், குருத்து ஞாயிறு, புனிதவாரச் சடங்குகள், என்பதுதான். இன்று நடைமுறையை நோக்கினால், பெரும்பாலும் இவை மேலோட்டமாக, வாடிக்கைக் கொண்டாட்டங்களாகவே மாறி வருகின்றன. காரணம் நம்மில் பலர், தவக்காலத்தின் ஆழ்ந்த உண்மைப் பொருளை இன்னும் உணரவில்லை. இந்நிலையைக் களைந்து தவக்காலத்தின் உட்பொருளை ஆழ்ந்து உணர்ந்து அர்த்தமுள்ள விதத்திலே கொண்டாட அன்னையாம் திருச்சபை நம்மை அழைக்கின்றது.

தவக்காலம், தன் மறுத்தலுக்கும் நோன்பிற்கும் சிறந்த காலம். அதே சமயம் தோழமைக்கும் நெருங்கிய ஒற்றுமைக்கும் ஏற்ற காலமும் கூட. தவக்காலத்தின் சிறப்பை எடுத்துரைக்க இதற்குமேல் எதுவும் கூற வேண்டுமோ? இறைவாக்கினர் இசையாசின் வாயிலாக இறைவன் அறிவித்ததை தவக்கால இறைபணியில் திருச்சபை நமக்கு வழங்கும் அறிவுரைக்குச் செவி மடுப்போம். ''பசித்திருப்பவனுக்கு உன் அப்பத்தைப் பகிர்ந்து கொடு. ஏழைக்கும் அன்னியர்களுக்கும், உன் வீட்டில் தங்குவதற்கு இடம் கொடு. ஆடை இல்லாதவனைக் கண்டால் அவனைப் போர்த்து. உன் இனத்தாரை அவமதிக்காதே'' இதுவன்றோ நாம் விரும்பும் மேலான நோன்பு. (இசை: 58 : 6-7) இந்த வார்த்தைகள் இன்றைய மக்களின் ஏக்கங்களை எதிரொலிக்கின்றன, எல்லோருடைய துன்பங்களிலும் வறுமையிலும் ஒவ்வொருவனும் உண்மையாகப் பங்கு கொள்ளுதல் அவசியமாகிறது. பிச்சையிடுவதும், பிறர் நலனுக்குத் தன்னை அர்ப்பணிப்பதும் தனிப்பட்ட அல்லது எப்போதாவது ஒரு சமயம் செய்யப்படும் செயல்கள் அல்ல, மாறாக மக்களிடையே நிலவும் சகோதர ஒற்றுமையை அறிவிக்கும் அருஞ்செயல்களாகும். நம் சகோதர சகோதரிகளுக்கும் நாம் செய்த உதவிகளின் சிறப்பை, இயேசுவே ஒரு நாள் வெளிப்படுத்துவார், ''பசியாய் இருந்தேன் எனக்கு உண்ணக் கொடுத்தீர்கள். தாகமாக இருந்தேன் எனக்குக் குடிக்கக் கொடுத்தீர்கள். ஆடையின்றி இருந்தேன் என்னை உடுத்தினீர்கள்'' (மத். 25 : 35-36) என்பார். துன்புறும் தம் சகோதர சகோதரிகள் வழியாக, கிறீஸ்து உதவி கோருகின்றார். இக்கோரிக்கையை ஒவ்வொரு கிறிஸ்தவனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தனக்கு விடுத்த வேண்டுகோளாகக் கருதவேண்டும்.

## தவக்காலத்தின் நோக்கம் என்ன?

நாம் செய்யும் எந்த ஒரு செயலுக்கும் ஒரு குறிக்கோள் நிச்சயம் உண்டு. அதுபோல திருச்சபையின் தவமுயற்சிகளுக்கும், காலப் பரிமாணத்தில் அவை பெற்ற மாற்றங்களுக்கும் பல நோக்கங்கள் உண்டு. திருச்சபையின் ஆரம்பகாலத்தில், திருமுழுக்குப் பெற விரும்பிய மக்கள் (வயது வந்தோர்) 40 நாட்கள் தங்களைச் சிறப்பாகத் தயாரித்தனர். தகுந்த தயாரிப்புக்குப் பின்னர், இயேசுவின் உயிர்ப்பு பெருவிழா அன்று அவர்கள் திருமுழுக்கினால், அவர்களின் பாவக் கறைகள் கழுவப்பட்டு, திருச்சபையின் உறுப்பினர் ஆயினர். இந்தப் பின்னணியில் தான் தவக்கால நோன்பு முயற்சி ஆரம்பிக்கப்பட்டது. தமது பாவநிலையை உணர்ந்து மனம் திரும்பி கிறிஸ்துவோடு புதிய வாழ்விற்கு உயிர்த்தெழுவதற்கு முன் தயாரிப்பாக அமைந்ததால், அனைவருமே தவக்கால நோன்பு கடைப்பிடிக்கும்படியாயிற்று. தன் உயிர் தந்து மனித குலத்தின் மீட்பை நிறைவேற்றிய இயேசுவின் திருப்பாடுகளைத் தியானிக்கும் வண்ணம், தவக்காலத்தின் உச்சக்கட்டமாக புனித வாரச் சடங்குகள் இடம்பெறுகின்றன. இயேசுவின் இறப்பு உயிர்ப்பு நிகழ்ச்சிகளில், அர்த்தமுள்ள முறையில் எல்லாக் கிறிஸ்தவர்களும் பங்கு கொள்ளும் பொருட்டு, இத்தவமுயற்சிகள் வலியுறுத்தப்பட்டன.

## மனமாற்றம் தேவை

இயற்கையில் மாற்றம், மனிதனுடைய வாழ்விலும் வளர்ச்சியிலும் மாற்றம். மனிதனுக்கு மாற்றம் அவசியம். சிறப்பாக மனமாற்றம் தேவை. பாவத்தில், துன்பத்தில் இருந்து, அருளின் இன்பத்தை அடைய, மனமாற்றம் தேவை. அறியாமை இருளில் இருந்து, உண்மை ஒளிக்குச் செல்ல, மண்ணக சாவினின்று விண்ணக வாழ்வினையடைய வேண்டுமானால் பாவத்திற்கு மனம் வருந்த வேண்டும். பின் மனமாற்றம் அடைந்து பாவத்திற்கு தவம் செய்ய வேண்டும். பொன்னைச் சுத்தம் செய்ய நெருப்பு வேண்டும். அசுத்தம் நிறைந்த ஆன்மாவைச் சுத்தம் செய்யத்தவம் வேண்டும். இவ்வாறு தவம் செய்தால், ஒளிரும் ஆதவன் மெழுகினை உருக்குகின்றானே அதே போல் நமது தவமும், நமது கடின மனதை மென்மையாக்கும். வனாந்திரத்தில் அன்று ஒலித்த குரலும், 'மனம் திரும்பி தவம் செய்யுங்கள், என்று கூறியது. இயேசுவும் அதே குரலை மீண்டும் எழுப்பினார். மனம் திரும்பாத கொராசின் - பெத்சாயிதா - நகரங்களைச் சபித்த இயேசு, மனம் திரும்பா ஜெருசலேம் நகரை நோக்கி கண்ணீர் வடித்த இயேசு, 'இன்றும் நம்மைத் தவம் செய்ய அழைக்கின்றார். மனம்வருந்தி மனமாற்றம் அடைய வேண்டுமென அழைப்பு விடுக்கின்றார்.

மன மாற்றம், இதயத் தூய்மை, தூயவாழ்வு இவற்றிற்கு உடல் ஒறுத்தல் அல்லது நோன்பு ஏன் என்ற கேள்வி நம்மில் பலருக்கு எழுவதுண்டு. உள்ளத்தின் உண்மையான மாற்றத்தைக் காட்டும், வெளி அடையாளமே உடல் நோன்பு. உடல் இச்சைகளை அடக்கி, ஐம்புலன்களையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைக்கக் கற்றுக் கொண்டவனுக்கு, மனத்தூய்மை பெறுவது மிகவும் எளிது. உண்மையான மன மாற்றம் இல்லாது வெளி அடையாளங்களை மட்டும் நிறைவேற்றுவதில் திருப்தி அடையும் நம்மைப் பார்த்து 'உங்கள் உடைகளைக் கிழித்துக் கொள்ள வேண்டா, உங்கள் இயதங்களைக் கிழித்துக்கொள்ளுங்கள். உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்' (யோவேல் 2:31) என்று இறைவாக்கினர் யோவேல் கூறிய அதே வார்த்தைகள், இன்று நமக்கு கூறப்படுகின்றன. இறைவன் நம்மிடம் வெளிவேடங்களையல்ல மனமாற்றத்தையே விரும்புகிறார் என்பது அனைவரும் ஏற்க வேண்ய உண்மை.

தவக்காலம் அளிப்பது சாம்பலை அல்ல, மகிழ்ச்சியை. ஏனெனில் சாம்பல் குறிப்பது, மண்ணோடு மண்ணாகி மனித உடலை ஒன்றுமில்லாமையாக்கும். சாவை மட்டுமல்ல, அந்த சாவுக்கே சவக்குழி தோண்டிய கிறிஸ்துவின் உயிர்ப்பைக் குறிக்கின்றன. எனவே துன்புறும் மக்களுக்கு நல்லாசி கூறுவதற்கும், மனம் உடைந்தவர்களுக்கு புத்துயிர் அளிப்பதற்கும், அடிமையானவர்களுக்கு விடுதலையளிக்கும் நாட்களாகவும், ஏழைகளின் கண்ணீர்களைத் துடைக்கும் மகிழ்ச்சியின் காலமாகத் தவக்காலத்தை மாற்றி - நாமும் மனம் மாறியவர்களாய், மானிடர் அனைவரையும், தன்மானம் உள்ளவர்களாக மதித்து, நடக்க நம் வாழ்வை மாற்றி அமைப்போம். மிகுதியான உடமையைப் பகிர்ந்து வாழ்வோம். அப்போது கிறிஸ்துவோடு நாமும் உயிர்த்தவர்களாய் - சிறப்பான கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வோம் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இ. பி. 20ம் நூற்றுண்டில் நல்ல சமாரியன் உவமை

(லூக்: 10/30-37)

றெக்ஸ் ஜோசப்

கிறிஸ்து பிறப்பு, கிறிஸ்துவின் பாடுகள் - மரணம் - உயிர்ப்பு, பரிசுத்த ஆவியின் வருகை என்னும் திருநிகழ்ச்சிகளெல்லாம் மனித மனதிலும், வாழ்விலும், வரலாற்றிலும் விழாவண்ணம், விழாக்களாகவும், கொண்டாட்டங்களாகவும் உறைந்து மரத்து விட்டன. சடங்குகளிலும் மறையுரைகளிலும் மட்டுமே இன்று இவற்றின் முக்கியத்துவத்தைக் கேட்கவும் காணவும் முடிகிறதேயன்றி அன்ருட வாழ்வில் காண முடிவதில்லை. மெசியாவையும் நல்ல சமாரியனையும் திருச்சபை சடங்கு ரீதியில், எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறது. *ஆகமன* காலம் என்று அதற்குப் பெயரும் வைத்துள்ளது. நல்ல சமாரியனுக இருக்கவேண்டியவர்கள், நல்ல சமாரியனின் வரவை வெளியிலிருந்து எதிர்ப்பார்பதென்ருல், நல்ல சமாரியன் வருவாரா? அது நடக்க முடியாத முரண்பாடல்லவா? கிறிஸ்தவன்தான் இன்று கிறிஸ்து. அவன் அல்லது அவளிலேயே கிறிஸ்து பிறக்கிருர், செயல்படுகிருர், துன்புறுகிருர், மரிக்கிருர், மறுஉயிர் பெறுகிருர். பிறிதொரு கிறிஸ்துவைத் திருச்சபை எதிர்பார்த்து விழாக் கோலம் பூண்டு வழிமேல் விழிவைத்தும் கண்கள் பூக்கப் பார்த்திருப்பதெல்லாம் தன் பொறுப்புக்களைத் தட்டிக் கழித்துப் பிறர் தலைமேல் சுமத்திவிட்டு வானத்தை அண்ணுந்து பார்த்து வாளாவிருக்கும், ஒரு தாலந்தைப் பெற்றுக் கொண்ட அந்தக் கையாலாகாத ஊழியனின் நிலையைப் போன்றதேயாம் என்பது என் தாழ்மையான கருத்தாகும். எனது குருத்துவ நண்பர் காலம் சென்ற அருட்திரு. சந்திரா பெர்னுண்டோவுக்கு என் எளிமையான நினைவஞ்சலியாக இதனைச் சமர்ப்பணம் செய்கிறேன்.

**ஜெருசலேமிலிருந்து ஒருவன்**
**ஜெரிக்கோவுக்கு பயணம் சென்ருன்**

*மூன்ருவது மண்டல நாடுகளின் மக்கள் (இலங்கையின் மக்கள் என்றும் கூடச் சொல்லலாம்) முடியாட்சியிலிருந்து ஜனநாயகத்தை நோக்கிச் சென்ருர்கள் — அடிமைத் தளையிலிருந்து விடுதலையை நோக்கிப் பயணமானுர்கள் — அபிவிருத்தி அடையாத நாடுகள் அபிவிருத்தியை நோக்கி நடந்தன. கொலனித்துவ ஆதிக்கத்திலிருந்து இந்நாடுகள் சுய அரசியல் இறைமையை நோக்கித் தங்கள் சுதந்திர யாத்திரையை ஆரம்பித்தன — வறிய நாடுகளின் மக்கள் வேலையில்லாத் திண்டாட்டத்திலிருந்து தொழில் வாய்ப்புகளை நோக்கிப் பயணமானுர்கள் — பாரம்பரிய, பாமர, ஆட்கூலித் தொழில் முறைகளிலிருந்து, இயந்திர மயமாக்கப்பட்ட தொழில் நுட்ப முறையை நோக்கி வறிய நாடுகள் பயணமாயின.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**வழியிலே அவன்**
**கள்வர் கையில் அகப்பட்டான்**

வறிய நாடுகள் வல்லரசுகளின் கைகளுக்குள் அகப்பட்டன — சர்வதேசத் தரகர்கள் பிடியிலும், சர்வதேச லேவாதேவிக்காரர்களின் (கடன் கொடுக்கல் வாங்கல் செய்வோர்) கைகளுக்குள்ளும் பன்னாட்டுப் பணமுதலீட்டு நிறுவனங்களின் கைகளுக்குள்ளும் அபிவிருத்தியடையாத நாடுகள் அகப்பட்டுக்கொண்டன — சர்வதேச அபிவிருத்தி நிறுவனங்களின் பிடிக்குள்ளும், சுதேச அபிவிருத்தி நிறுவனங்களின் பிடிக்குள்ளும் மூன்றாவது மண்டல நாடுகள் சிக்கிக்கொண்டன — அரசியற் பொருளாதார சுயநலமிகளின் கைகளுக்குள் இவ்வறிய நாடுகளின் மக்கள் அகப்பட்டுக் கொண்டனர் — தொழில் வாய்ப்பற்றவர்கள் சர்வதேச, சுதேச ஆள்சேர்ப்பு நிறுவனங்களின் வலைகளுக்குட் சிக்கிக் கொண்டனர் — அரசியல் ரீதியிற் பலவீனமான மக்கள் அரசியற் புரட்சியாளர்களின் பிடிக்குள்ளும், பொருளாதார ரீதியிற் பலவீனமானோர் பொருளாதாரப் புரட்சியாளர்களின் பிடிக்குள்ளும் அகப்பட்டுக் கொண்டார்கள்.

**கள்வர்கள் அவனிடமிருந்ததை எல்லாம் பறித்துக்கொண்டு அடித்துக்**
**காயப்படுத்திக் குற்றுயிராக**
**விட்டு ஓடிப்போனார்கள்**

கொலனித்துவ ஆட்சியாளர் தாங்கள் பிடித்துக்கொண்ட நாடுகளிலிருந்து பெருஞ் செல்வங்களையும், அரும்பொருட்களையும், வளங்களையும் ஏற்றிச் சென்று தங்கள் நாட்டின் திறைசேரிகளை நிறைத்தனர், வீடுகளை அலங்கரித்தனர். வறிய நாடுகளில் இருந்து வளங்களை ஏற்றிச் சென்று தங்கள் நாடுகளின் பொருளாதாரங்களை விருத்திசெய்துகொண்டு இவ்வறிய நாடுகளை வீதியில் அனாதரவாக, வளமற்ற ஏழ்மை நிலையில் விட்டுச்சென்றனர் — அபிவிருத்தி, இயந்திர தொழில்நுட்பமயமாக்கல் என்னும் போர்வையில்; தங்களிடமிருந்த பழைய, காலாவதியான இயந்திரங்களையும், பழசாகிப்போன பொருட்களையும், உபகரணங்களையும் மேற்படி வல்லரசுகளும் முதலாவது மண்டல நாடுகளும் ஏழ்மை நிறைந்த நாடுகளுக்கு இறக்குமதி செய்து இந்நாடுகளை இன்னுமின்னும் சர்வதேசக் கடன்களில் மூழ்க வைத்தன — செயற்கையான, அந்நியமான பொருளாதாரத் திட்டங்களைப், பொருளாதாரத்திற் பலவீனமான வளர்முக நாடுகளில் தங்கள் செல்வாக்கை உபயோகித்துப் புகுத்தியதன்மூலம் இந்த ஏழை நாடுகள் அவர்களின் அத்தியாவசியத் தேவைகளுக்குத் தங்களில் என்றைக்கும் தங்கி நிற்கும் வகையில் வல்லரசுகளும் இயந்திரத் தொழில்நுட்பத்தில் திளைத்த நாடுகளும் செயலாற்றின — சர்வதேச ஆள்சேர்ப்பு நிறுவனங்களும், அவர்களின் சுதேசத் தரகர்களும் வேலையற்ற வறிய ஆண், பெண் இளைஞர்களை வேலை தருவதாகச் சொல்லி அவர்களது பணத்தையும், சொத்தையும் சுருட்டிக்கொண்டு, அவர்களைப் பிற நாடுகளுக்கு அழைத்துச் சென்று மிகுந்த கடின வேலை வாங்கிக் குறைந்த ஊதியம் கொடுத்தனர். அல்லது பிறநாடுகளில் நடுத்தெருவில் அவர்களைப் பிச்சை எடுக்க விட்டுவிட்டு மறைந்துகொண்டனர் — வளர்ச்சி பெற்ற வல்லரசுகள் வளர்முக நாடுகளிற் தங்கள் அரசியற் பொருளாதாரக் கொள்கைகளையும் தங்கள் நாட்டுப் பொருட்களையும் பெருவாரியாகத் திணித்து அவற்றைத் தங்கள் கடனாளிகளாகவும் கூட்டாளிகளாகவும் ஆக்கிக்கொண்டனர் — ஏழ்மை நிறைந்த வளர்முக நாடுகளின் மக்கள், இவ்வாறு அரசியலில் நசுக்கப்பட்டவர்களாகவும், பொருளாதாரத்தில் பலவீனர்களாகவும், சமூக ரீதியிற் பலவாறு பிளவுற்றவர்களாகவும், அபிவிருத்தியிற் பின்தங்கியவர்களாகவும், நடுவீதியிற் குற்றுயிராய்க் கிடந்தனர்.

**அப்போது ஆசாரியன் ஒருவன் அவ்வழியே வந்தான். அவன் குற்றுயிராய்க் கிடந்த அந்த மனிதனைக் கண்டும் காணாதவன்**
**போல அவனைக் கடந்து தன்**
**வழியே போய்விட்டான்.**

சமயங்களும் சமய நிறுவனங்களும் சமயப் பிரமுகர்களும்; நசுக்கப்பட்ட, எளிய, பலவீன மக்களின் சேவைக்கும் சுபீட்சத்துக்குமே தாங்கள் அழைக்கப்பட்டுள்ளனர் என்று கூறிக்கொண்டு உணவுப் பொட்டலங்கள், பழைய உடைகள் போன்ற நிவாரணங்களை

யும், சிறு வீடுகள், புனருத்தாரனத் திட்டங்கள் முதலியவற்றையும் வழங்கிவிட்டு, எளியவர்களின் வந்தனங்களையும், புகழ் மாலைகளையும் பெற்றுக்கொண்டு, தங்களது இடம் அதுவல்ல என்பதுபோல் ஒடுக்குபவர்களுக்கே உரித்தான உல்லாசமும் வளமும் நிறைந்த தங்கள் உப்பரிகைகளிலும், கோபுரங்களிலும், மாளிகைகளிலும் வந்து தங்கிவிட்டனர். வேறுசில குருக்களும், துறவிகளும் ஆன்மீக வாதிகளும் குற்றுயிராய்க் கிடந்த இந்த (அரை) மனிதர்களை மிகுந்த அன்புடனும், கருணையுடனும் இரட்சணிய வாஞ்சையுடன் கண்ணோக்கி, அவர்களுக்குப் பின்வருமாறு உபதேசித்தனர். ''இறைவன் மிகவும் நல்லவர்; அவர் ஏழைகளை மிகுந்த விசேஷமாய் நேசிக்கிறார், அவர்களில் மிகுந்த வாஞ்சையாய் இருக்கிறார். நீங்கள் அவரின் சிறப்பான பிள்ளைகள், நீங்கள் நிச்சயம் மோட்சராச்சியத்துக்குள் பிரவேசிப்பீர்கள். எனவே உங்கள் ஏழ்மையையும் வேதனைகளையும் சர்வ வல்லமையுள்ள, வரமருளும் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து ஜெபம் பண்ணுங்கள்'' இப்படிக் கூறிவிட்டு, அவர்களை ஆசீர்வதித்து, தங்கள் அழகிய விலையுயர்ந்த வாகனங்களில் ஏறிக்கொண்டு, பெருஞ் செல்வர்களினதும் ஏகாதிபத்தியவாதிகளினதும் கேளிக்கை விருந்திற் கலந்து கொள்வதற்காகப் பறந்து சென்றனர் — வேறுசில பக்திமான்களும் 'இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்' என்பவர்களும், இவ்வுலகம் நிலையற்றது, துன்பமும், கேடும் நிறைந்தது. எனவே இவ்வுலக இன்பங்களையும், சுகங்களையும் தேடி அலைவதை விடுத்து மறு உலக இன்பத்தையும் வளத்தையும் வாழ்வையுமே நாடவேண்டும்'' என லாசரைப் போன்ற ஏழைகளுக்கு உபதேசித்துவிட்டுத் தங்கள் மனைகளை மறு உலகைப் போன்ற சொர்க்கபுரிகளாக ஆக்கிக் கொள்வதிற் கவனம் செலுத்தினர்—

அரசியல்வாதிகள் அந்த வழியே வந்து குற்றுயிராய்க் கிடந்த அந்த ஏழை மனிதனைப் பார்த்து ''உங்களைப் பார்க்கையில் என் மனம் அ(கமகி)ழுகிறது. மற்ற அரசியற் கட்சிகளின் அடக்கு முறைகளினாலும், அட்டூழியங்களினாலும், பொறுப்பற்ற செயற்பாடுகளினாலுமே நீங்கள் இந்நிலைக்குத் தள்ளப்பட்டீர்கள். நான் உங்களை நல்ல நிலைக்கும் சுபீட்சத்துக்கும் இட்டுச் செல்வேன். உங்கள் வறுமையைப் போக்கி உங்களைச் செல்வர்களாக்குவேன். உங்களுக்கு உணவும், உடையும், உறையுளும் கிடைக்க வழிசெய்வேன். உங்களை ஆள அல்ல, — உங்களுக்கு சேவை செய்ய எனக்கு வாய்ப்பளியுங்கள்'' என்று கூறி இவ்வாறு ஏழைகளின் ஓட்டுக்களை பெற்று அவர்களின் சுதந்திரத்தைப் பறித்துக் கொண்டு, அதிக விலைகளுக்குச் சிறுசிறுபொருட்களைக் கொடுத்து, பழுவான வரிகளையும் அவர்கள் மேற் சுமத்திவிட்டுக் குளிரூட்டப் பெற்ற கார்களிலும், வான ஊர்திகளிலும் ஏறி இந்தப் பாரெங்கும் பறந்து திரிந்தனர்; சமாதானத்தை நிலைநாட்டுதல் என்ற போர்வையில் தங்கள் முப்படைகளைப் பெருப்பித்து ஸ்திரப்படுத்தி தங்கள் அரசியல் எதிரிகளுடன் தீவிரமாகப் போர்புரிந்து, தங்கள் சர்வதேசப் பதிலாளிகளிடம் இருந்து ராணுவ, பொருளாதார நன்மைகளைப் பெற்றுக்கொண்டனர். தங்கள் போர்களின்போது பல கிராமங்களையும் நகரங்களையும் அழித்தனர்; பல அப்பாவி மக்களைப் பலி கொண்டனர்; இவற்றிற்கெல்லாம் காரணம் தங்கள் அரசியல் எதிரிகளே என அவர்கள் மீது பழியைப் போட்டனர். மக்கள் பொருளின்மையினாலும் பாதுகாப்பின்மையினாலும் அல்லற்பட, இவ் அரசியல்வாதிகள் மட்டும் மட்டுப்படுத்தப்படாத செல்வத்திலும், காலுக்கும் கைக்கும் தலைக்கும் மெய்க்காப்பாளர் புடை சூழத் திளைத்து விளைந்தனர்.

**அதே போன்று லேவியன் ஒருவனும் அவ்வழியே வந்தான். அவனும் குற்றுயிராய்க் கிடந்த அந்த மனிதனைக் கண்டும் காணாதவனைப்போல் தன் வழியே போய்விட்டான்.**


அனைத்துச் சமயங்களின் இறையியலாளர்களும் மார்க்சவிற்பன்னர்களும் ஏழ்மையையும், சுரண்டலையும், ஒடுக்குதலையும் பற்றி புத்தகம் புத்தகமாக எழுதிக் குவித்தனர். அவைகளைப் பற்றி ஜனரஞ்சகமான மறையுரைகளாற்றி சுதேசத்திலும் சர்வதேச அரங்குகளி

லும் பட்டிமன்றங்கள் நடத்தி புகழும் பணமும் சம்பாதித்துக்கொண்டு மறைமுகமாகக் கள்வர்களினதும் ஒடுக்குவோரினதும் பக்கம் சேர்ந்து கொண்டனர் -

அதே போன்று அபிவிருத்தித் துறை வல்லுனர்களும் சமூகவியல் அறிஞர்களும், சுதேச/சர்வேதச வட்டமேசை மகாநாடுகளில் ஏழைகளின் நிலையைக் காரசாரமாக விவாதித்துக் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான திட்டங்களைத் தீட்டினர். ஏழைகளின், ஒடுக்கப்பட்டோரின் பிரதிநிதிகளென்று தங்களுக்கு நாமமிட்டுக்கொண்டு நாட்டுக்கு நாடு முயல் பாய்ச்சலில் தாவித் திரிந்தனர். இத்தகையோர் ஒடுக்கப்பட்டோர் / ஏழைகள் புண்ணியத்தில் தங்கள் சர்வதேச அறிமுகங்களையும் புகழ்களையும் நிலைப்படுத்திக்கொண்டு திரைகடலோடிச் சேர்த்த திரவியங்களையும் எடுத்துக்கொண்டு ஏழைகளை விட்டுத் தூரமாகப்போய் யாருக்கும் சொல்லாது மறுபக்கம் சேர்ந்து கொண்டனர்.

சமூகசேவையாளர்களும் அந்த வழியே வந்தனர். வீடிழந்து, உடமைகளிழந்து உணவும் உடையும் உறையுளும் இன்றி வாழும் அரை மனிதர்களை, ஒடுக்கப்பட்டு, சுதந்திரமும் உரிமைகளுமின்றி வாடும் மனிதர்களைக் கண்டனர். அவர்களது மெலிந்த தோற்றங்களையும், அரை நிர்வாணக் கோலங்களையும். உடைந்த வீடுகளையும் படம் பிடித்து வசதியுள்ள நாடுகளுக்கு அனுப்பி கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான அபிவிருத்தி / புனர்வாழ்வுத் திட்டங்களை உருவாக்கினர். அப் பணத்தில் பெருந்தொகையை ஏழைகளுக்குப் பரவலாகப் பகிர்ந்தளித்து விட்டு; தாங்களும் அதிலொரு கணிசமான பகுதியை (களவாய்) எடுத்துக்கொண்டு; ''ஏழைப்பங்காளன்'', ''தருமவான்'', ''பொது நலச் சேவையாளன்'' எனும் பெயரையும், புகழையும் சம்பாதித்துக் கொண்டு மறைவாக மறு பக்கம் சேர்ந்து கொண்டனர்.

அவ்வாறே சுதந்திரப் புரட்சியாளர்களும் விடுதலைப் படையினரும், சமாதானப் படையினரும் பெரிய ஆயுதங்களுடன் கவச வாகனங்களிலும், ஆகாய விமானங்களிலும், கப்பல்களிலும் வந்திறங்கினர். ''உங்களை நாங்கள் காப்பாற்றுவோம்; யாமிருக்கப் பயமேன்'' என்று ஒடுக்கப்பட்டோரிடமும் ஏழைகளிடமும் சொல்லிக்கொண்டு தங்கள் எதிரிகளுடன் நேரடியாகவும், கெரில்லா முறையிலும், யுத்தம் புரிந்தனர். அப்போர்களில் அப்பாவி மக்கள் பலர் உயிரிழந்தனர். மற்றையோர் நடுத்தெருவிலேயே கிடந்தனர். தங்களிடம் சிறைப்பட்டோரை ஈவிரக்கமின்றிச் சித்திரவதை செய்தனர். எரிகின்ற வீடுகளிலே பிடுங்கி லாபம் சேர்த்தனர். மக்களிடம் இருந்து உடமைகள், நகைகள் முதலியவற்றைக் கொள்ளையிட்டனர் அல்லது பறித்தனர். மக்களை ஆளும் முறை அவர்களுக்கு வந்தபோது அவர்களும் ஏகாதிபத்தியவாதிகளின் வாரிசுகளாயினர்.



ஆனல் அந்த வழியே ஒரு சமாரியன் வந்தான். குற்றுயிராய்க் கிடந்த மனிதனைக் கண்டு மனம் கசிந்து அவனண்டை சென்று அவன் காயங்களுக்கு எண்ணெயும் திராட்சை ரசமும் தடவிக் கட்டுப்போட்டு அவனைத்தன் கழுதையின் மேலேற்றி ஒரு சத்திரத்திற்குக் கொண்டு வந்து அவனைப் பராமரித்தான்.

இன்று சுபீட்சத்திற்குப்போகும் வழியில் அபிவிருத்திக்கும் அரசியல் இறைமைக்கும் இட்டுச் செல்லும் பாதையில் குற்றுயிராய் விழுந்து கிடக்கும் ஏழைக்கும் ஒடுக்கப்பட்டோருக்கும் உதவும் நல்ல சமாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

யன் யார்? பயணம் செய்த மனிதன், அவனை அடித்து அவனிடமிருந்து பறித்துக்கொண்ட கள்வர்கள், அவ்வழி சென்ற ஆசாரியன், லேவியன் போன்றவர்களை அறிமுகம் செய்ய முடிந்ததுபோல - அவர்களை இனம் கண்டு பிடிக்க முடிந்ததுபோல சமாரியனை அறிமுகப்படுத்தவோ அன்றேல் இன்று இனம் காணவோ என்னால் முடியவில்லை - இந்த நல்ல சமாரியன் யார்? இதய சுத்தியுடன், கறைபடாத கைகளுடன் தன்னால் முடிந்த வரை ஏழைகளுக்கும், ஒடுக்கப்பட்டோருக்கும் உதவிசெய்து ஒளியின் திசையை அவர்களுக்குக் காட்டும் சேவகனை - அல்லது ஸ்திரமான மதங்களாலும், மார்க்கங்களாலும், நிலைபெற்ற நிறுவனங்களாலும், புரட்சியாளன், ஒழுங்கு தவறியவன் என்றும், பேதகன் என்றும், ஆன்மீகம் அற்றவன் என்றும் நாஸ்தீகன் என்று பெயர் வாங்கிக்கொண்டு மேற்படி மதங்கள் நிறுவனங்களின் ஊழல்களையும், புரட்டுக்களையும் சுட்டிக் காட்டிக் கண்டித்து மக்களிடையே விழிப்புணர்வைத் தூண்டிவிடும் அந்த வேலையில்லாத, வரையறையில்லாத அனுமதேயச் சேவையாளனை- அல்லது அவர்களுக்காகச் சேவை செய்வதுடன் நின்று விடாது, அவர்களுடன் வேலை செய்து, அவர்கள் மத்தியிலே வாழ்ந்து அவர்களது இன்பங்கள், துன்பங்கள், கஷ்டங்கள், ஆபத்துக்கள், பாதுகாப்பின்மை முதலியவற்றிற் பங்கெடுத்து; வாழ்விலும் தாழ்விலும், ஏன் மரணத்திலும் கூட ஏழை எளியவர், நசுக்கப்பட்டோரின் நன்மையிலே ஈடுபாடுகொள்ளும் அந்தப் ''பிழைக்கத்தெரியாத'' சேவையாளனை - இத்தகைய நல்ல சமாரியனின் உருவம் கானல் நீரிடையே தெரியும் தளும்புகின்ற மங்கலான புற உருவம் போல எனக்குத் தெரிகின்றதே யொழிய இதுவரை கண்ட அல்லது அறிமுகப்படுத்தப் பட்ட எந்த உருவங்களுடனும் ஒப்பிடக் கூடியதாகத் தெரியவில்லை. நல்ல சமாரியனென்று வந்தவர்களெல்லாம் கள்வர்களாகவும் அன்றேல் ஒடுக்குபவர்களாகவும் அல்லது ஒடுக்குபவர்களின் சூட்சும நண்பர்களாகவும், பங்காளிகளாகவும், அபிமானிகளாகவும், தரகர்களாகவும், கைகூலிகளாகவுமே நடந்து கொண்டுள்ளனர் என்பது அடியேன் எனது தாழ்மையான அபிப்பிராயம். (உங்களுக்குப் பிழையென்று பட்டால் என்னை மன்னிக்கவும்.)

நல்ல சமாரியன் வந்துவிட்டாரா? வந்து கொண்டிருக்கிறாரா? அல்லது வருவாரா? - இறைமகன் யேசு நல்ல சமாரியனின் உவமையைக்கூறி முடித்தார். அந்தக்கதையை பூரணமாக்க அவரால் இயலுமாயிருந்தது. ஏனெனில் நல்ல சமாரியன் அவரே. அந்தக் கதையின் முடிவு அவரே. தன் வாழ்விலும், வார்த்தைகளிலும் அதை அவர் நிருபித்தார். அவரது உருவமும் நல்ல சமாரியனின் உருவமும் ஒன்றாயிருந்தன.

---

★ உலகில் வெற்றிகரமான மனிதனாக வாழ நான்கு குணங்கள் மட்டுமே தேவை. நிறையப்பொறுமை வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்தும் திறமை, தவறைக் கண்டிக்கும் அச்சமின்மை, தவறு செய்தவர்களையும் அணைத்துச் செல்லும் கனிவுடமை.

... மேத்பூ ஆர்னல்ட்

---

இன்றைய உலகின் சூழலில், இன்றைய இலங்கையின் சூழலில், நல்ல சமாரியனின் உவமைக் கதையை பூரணமாக்க - அக் கதையை நிறைவு செய்ய இயலுமா? மனிதன் (சமூகம்) குற்றுயிராய் வீதியில் விழுந்து கிடக்கிறான். கள்வன், ஆசாரியன், லேவியன் போன்றோர் அவ்வழியே சாரை சாரையாய்ப் போய்க் கொண்டிருக்கின்றனர். நல்ல சமாரியன் வருவாரா? எப்போது வருவார்? அத்தகைய நல்ல சமாரியன் யார் என்பதல்ல கேள்வி, அந்த நல்ல சமாரியன் நானா அல்லவா என்பதே கேள்வி. நல்ல சமாரியன் உவமையில் நாம் அனைவரும் பாத்திரங்கள். இந்தப் பாத்திரங்களுள் எனக்குப் பொருந்தும் உருவமும் பாத்திரமும் யாது? நல்ல சமாரியன் நானா, நான் இல்லையா? □

## மனச்சாட்சி

கண. மகேஸ்வரன்

மனச்சாட்சி எங்கோ
மறைந்து கிடக்கிறது!

மானிட உடலின்
மெய்யுள் எங்கோ
மூலையில் பதுங்கும்
மூளையே போன்று...

நெஞ்சின் சுமைகளை
நெரிசலையெல்லாம்
பிஞ்சு மாங்காய்
போன்றதோர் அமைப்பில்
ரத்த நாளங்கள்
சப்திக்கும் ராகமாய்
எலும்புக் கூட்டுள்
பதுங்கும் இதயம்
இயங்குதல் போன்று...

மனச்சாட்சியும் எங்கோ
மறைந்து கிடக்கிறது!

நரம்பில்லா நாக்கு
நாலுஞ் சொல்லும்;
நீதியும் சமயத்தில்
பிறழ்ந்திடல் கூடும்;
ஆயுதம் வாயை
அடைக்கவும் கூடும்;
நெஞ்சின் உள்ளே
நெருடும் நெருப்பாய்...

மனச்சாட்சி எங்கோ
மறைந்தே கிடக்கிறது!

பாவி யூதாஸ்
தேவ மைந்தனைக்
காட்டிக் கொடுத்த
போதிலுங்கூட,

மனச்சாட்சி எங்கோ
மறைந்தே கிடந்தது!

மனச்சாட்சி முன்னால்
மனித மனங்கள்
மண்டியிட்டொதுங்கினால்...

தூய உலகம்
தெள்ளிதின் விளங்கும்;
தீமைகள் நாட்டில்
நீங்கியே தீரும்!

## பாக்கியவான்கள்

ஓ! மரங்களே
நீங்கள் பாக்கியவான்கள்
ஏனெனில்
உங்கள் இனத்தை அழிக்கும்
கோடரிக்கே நீங்கள்
பிடியாக இருந்து உதவுகிறீர்கள்
அதுமட்டுமா!
மானிடரின் பாவங்களை
சிலுவையாய் சுமந்து
மரித்த யேசுகூட
உங்கள் மேல்
அறை பட்டுத்தானே மரித்தார்

**வின்மினி**
இருதயபுரம்
மேற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மட்டுநகரின்
# கலை இலக்கிய வளர்ச்சிக்கு கைகொடுத்தவர் கலாநிதி 'வித்தி'

ரீ. பாக்கியநாயகம்

*காலஞ்சென்ற தமிழ் அறிஞர் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களை நன்கு அறிந்தவர் திரு. ரீ. பாக்கியநாயகம் அவர்கள். ஒரு காலத்தில் மட்டக்களப்புப் பிரதேச கலா மன்றத்தின் செயலாளராக இருந்து, கிழக்குப் பகுதியில் வித்தியின் தமிழ்க் கலை, பண்பாட்டு முயற்சிகளுக்கு துணை நின்றவர். கடந்தகால நினைவுகளை இக் கட்டுரையில் மீட்டுப் பார்க்கிறார் - ரீ. பா.*

ஆம்; பத்தாண்டு காலங்கள் - 1968ம் ஆண்டிலிருந்து, கோரச் சூறுவளி ஏற்படுத்திய கொடுமையின் காலம் வரையிலான அந்தப் பத்தாண்டு காலங்கள் - மட்டுநகரின் கலை இலக்கிய வளர்ச்சியைப் பொறுத்த மட்டில் மறக்க முடியாத, மனதை விட்டகலாத அந்தத் தசாப்தம் நிச்சயம் பொற்காலமே தான்.

பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் மறைந்த செய்தி கேட்டு மனத்துயர் அடைந்திருந்த எமது சிந்தனைகள் அந்தப் பத்தாண்டு காலத்தை நோக்கிப் பறக்கின்றன.

மட்டுநகரின் தேசியக் கலையெனத் திகழப்படும் நாட்டுக் கூத்து, நாடுவாரற்று நலிவுற்று நாதியாகக் கிடந்தவேளையில் திறமைமிகு நாட்டுக்கூத்துக் கலைஞர்களும் அண்ணாவிமாரும் இலைமறை காய்போல் கிராமத்து கூத்துக் களரி வட்ட எல்லைகளில் முடங்கிக் கிடக்கும் அவல நிலைக்கு ஆளாகியிருந்த வேளையில், நாட்டுக் கூத்தின் பெருமையை நாடறியச்செய்து, கண்டிய நடனமே எமது கலைச்சொத்து என்றிருந்த நிலையை மாற்றி, கூத்துக்கு மதிப்பையும் மவுசையும் தேடித் தந்தவர் ,வித்தி' அவர்கள்,

நாட்டுக் கூத்தையும் அதில் பங்குகொள்ளும் இளைஞர்களையும் நகரப்புற மக்கள் அலட்சியமாக மதித்து எள்ளி நகையாடியவேளை, அப்பண்பை மாற்றியமைத்து, பழந்தமிழர் இலக்கியத்தில் நாட்டுக்கூத்து வகித்து வந்த சிறந்த அந்தஸ்தையும் உன்னத நிலையையும் ஆதாரபூர்வமாகவும் ஆணித்தரமாகவும் எடுத்துக்காட்டினார் அந்தமேதை. அதுவரை அலுப்புத் தட்டிய ஆட்டமென அனேகரால் கருதப்பட்டு வந்த இந்தக் கலைக்கு மெருகூட்டினார் அவர். கூத்துக்களில் வரையறுக்கப் பட்டநேரக்கட்டுப் பாடு, ஆட்ட அமைப்பு, ஆடும் அரங்கு ஆகியவற்றிலெல்லாம் அவர் புதுமையைப் புகுத்தினார். அதேவேளை ஆட்டத்தின் சூத்ரதாரிகளான அண்ணாவிமார்களும் நம் மத்தியில் அருகி வரும் அரிய சொத்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

துக்களே என்பதை அனைவர் மத்தியிலும் நிலைநாட்டினார் கலாநிதி வித்தியானந்தன் அவர்கள்.

அப்போதுதான் மன்னாரிலிருந்து மட்டக்களப்புக்கு மாற்றலாகி வந்திருந்தார் புதிய மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா. உண்மையில் அவர் தேவனை மத்திரமல்ல, அத்துடன் மட்டுநகரின் பாரம்பரிய கலை கலாசாரத்தையும் பெரிதும் நேசித்தார் நேசையா அவர்கள். எடுத்த எடுப்பிலேயே மாவட்ட மெங்கும் பரந்து கிடந்த அறிஞர் பெருமக்கள், கல்விமான்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், இசைவல்லுனர்கள் ஆகிய அத்தனை பேர்களையும் ஒன்றாகச் சேர்த்து, பிரதேச கலாமன்றம் எனுமோர் அமைப்பை அவர் ஏற்படுத்தினார். நூற்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களை உள்ளடக்கிய இந்த அமைப்பிற்கு ஆலோசகராக, அப்போது பேராதனை பல்கலைக்கழகத்திலிருந்த கலாநிதி 'வித்தி' அவர்கள் நியமிக்கப்பட்டார். மட்டுநகர் மாவட்டத்தின் மூலை முடுக்குதோறும் கலைமணம் கமழ ஆரம்பித்தது. இறுதி மூச்சு விட்டுக்கொண்டிருந்த தமிழ் மக்களது பாரம்பரிய கலைகளுக்கெல்லாம் 'இன்ஜெக்ஷன்' ஊட்டப்பட்டது! கலைகளையும் கலைஞர்களையும் அரசும் மக்களும் மதித்துப் போற்றத்தலைப்பட்டனர்.

## அண்ணாவிமாருக்கு அடித்தயோகம்

மட்டுநகரின் கலை இலக்கிய வளர்ச்சிக்கு பிரதேச கலா மன்றத்தினூடாக கலாநிதி 'வித்தி' அவர்களால் அதிகம் செய்ய முடிந்தது இம் மாவட்டம் பெற்ற பாக்கியமென்றே கூறுதல் வேண்டும். ஆரம்பத்தில் மன்றத்தின் மாதாந்தக் கூட்டங்களில் மாத்திரம் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி வந்த அவர், காலப்போக்கில் வாரந்தோறுமே இப்பகுதிக்கு வருகை தந்து, நாட்டுக்கூத்தைப் பேணி வளர்த்து வரும் கிராமங்கள் தோறும் நடைபோட்டு அவர்கள் தம் ஆற்றலுக்கு ஆதரவளிக்கலானார். அதுவரை ஏட்டுருவில் மட்டுமே இருந்து வந்த நாட்டுக்கூத்துப் பிரதிகள் பலவற்றை நூலுருவில் வெளிக்கொணர அவர் உறுதுணை புரிந்தார், பிரிவுக் காரியாதிகாரி பிரிவுகள் தோறும் இப்பிரதேசத்திற்குரிய நாட்டுக்கூத்து, நாட்டுப் பாடல், கும்மி, கோலாட்டம், வசந்தன், கரகம் ஆகிய பண்டைய கலைகளில் ஆண்டுதோறும் போட்டிகளை ஏற்படுத்திப் பரிசுகள் வழங்கி உற்சாகப்படுத்த வழி சமைத்தார் கலாநிதி.

> இலட்சியத்தில் கவனம் செலுத்தி அதை அடைவதற்கு உறுதியுடன் முயற்சிக்கிறவன் தன்னை அறியாமலே மேதையாக உருவாகிறான்.
>
> □ நெப்போலியன் ஹில்

1969ம், 1970ம் ஆண்டுகளில் பிரதேச கலாமன்றம் பிரமாண்டமான முறையில் மூன்று தினங்கள் நடத்தியிருந்த கலைவிழாக்கள் உண்மையில் முத்தமிழின் பிரதிபலிப்பாக அமைந்திருந்தன. அவ்வேளை பதவியிலிருந்த கலாசார அமைச்சர்களை மட்டுநகருக்கு வரவழைத்தது மாத்திரமன்றி, மாவட்டத்திலுள்ள அண்ணாவிமார்களை எல்லாம் அழைத்து ஒன்றுகூட்டி, அமரச்செய்து பகல் விருந்தில் பங்கு பற்றச் செய்ததில் பெரும் பங்கு கலாநிதி வித்தியானந்தன் அவர்களையே சாரும். மேளவாத்தியங்கள் சகிதம் நகரின் பிரதான வீதிகளினூடாக அண்ணாவிமார்கள் அழைத்து வரப்பட்டு, பழம்பெரும் நாடக நடிகமேதை கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் பிரதம அதிதியாக சிறப்பிக்க, கலாசார அமைச்சர்கள் தலைமையில் நகர மண்டபத்தில் அண்ணாவிமார் மகாநாடு கோலாகலமாக நடந்தேறியதை மட்டுநகர் மக்கள் என்றுமே மறக்கமாட்டார்கள். அத்தோடு கலைவிழாக் காலங்களில், தாம் நெறிப்படுத்திய பல்கலைக் கழக மாணவர்களின் 'இராவணேசன்' நாட்டுக்கூத்து, வைரமுத்து குழுவினரின் ''மயான காண்டம்'' ஆகியவற்றையும் மட்டுநகர் மைதான திறந்தவெளி அரங்கில் மேடையேற்றச் செய்து நம் பாரம்பரிய கலைகளுக்கு என்றுமே நல்லாதரவை வழங்கிவந்து பெருமையூட்டினார் கலாநிதி அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கலாநிதி 'வித்தி' அவர்கள் கலைப்பணியுடன் சேர்ந்து தமிழ் மொழிக்கு தம் ஆயுள் பூராவும் ஆற்றி வந்த நற்பணிகள் அனைத்தையும் நாடு நன்கறியும். அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மன்றம் நிறுவி அதன் தலைவராகப் பணி புரிந்து, ஈழத் தமிழ்ப் பண்பாட்டைப் பாரறியச் செய்த அன்னார், 1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடத்திய நான்காவது மகாநாட்டின் பின்னர் ஓர் முடிவை மேற்கொண்டார். அம் முடிவு, ஆண்டுதோறும் ஈழத்தில் பிராந்திய ரீதியிலும் தமிழாராய்ச்சி மகாநாடுகள் நடத்தி வருவது என்பதாகும்.

அதன்பிரகாரம் மட்டுநகர் வரலாறு எனறுமே கண்டறியாத வகையில், முத்தமிழ் வித்தகராம் விபுலானந்தர் அடிகளார் அவதரித்த இப் புனித பூமியிலே 1976ம் ஆண்டு பங்குனித் திங்கள் 19ம் திகதி முதல் மூன்று தினங்களுக்கு இம் முதலாவது பிராந்திய மகா நாட்டை ஒழுங்கு செய்தார் 'வித்தி'. ஈழத்துத் தமிழ் இலக்கியம். கலை, பண்பாடு, கல்வி முதலியவற்றின் வளர்ச்சிக்கு மட்டக்களப்பு மக்கள் ஆற்றிய அரும் பணிகளை அறிவதற்கும், இம் மாவட்டத்தின் சமூக, அரசியல், பொருளாதார ஆய்வுகள் வளர்ச்சியடைவதற்கும் வழிவகுத்த இம் மகாநாட்டில் ஐம்பதுக்கு மேற்பட்ட அறிஞர்கள் தத்தமது ஆய்வுரைகளை நிகழ்த்திய காட்சி உண்மையில் தமிழன்னைக்குச் சூட்டிய மற்றுமோர் புகழாரமாக அமைந்ததெனலாம்.

## தட்டிக்கொடுத்துப் பாராட்டும் தன்மை.

பேராசியர் 'வித்தி' அவர்களின் பெருந்தன்மை பற்றியும் அவர் மட்டுநகர் கலை இலக்கிய வளர்ச்சிக்கு என்றுமே கைகொடுத்து ஆதரித்த 'கதை'களையும் பக்கம் பக்கமாக எழுதலாம். ஆனல் இடவசதிதான் இங்கு போதாது. திறமை எவரிடமிருந்தாலும் அதற்கு மதிப்பளித்து அன்னாரைத் தட்டிக் கொடுத்துப்பாராட்டும் தனிச்சிறப்பம்சத்தை பேராசியர் தன்னகத்தே கொண்டிருந்தாரென்பதை எவருமே மறக்கமுடியாது. அவரிடம் நெருங்கிப் பழகிய அனைவராலும் இது நிச்சயம் ஏற்றுக்கொள்ளப்படும் உண்மையாகும்.

மட்டுநகர் தமிழாராச்சி மகாநாடு நடைபெறுவதற்கு முன்னதாக இப் பகுதித் தமிழ் அறிஞர்களையும் ஆர்வலர்களையும் பிரமுகர்களையும் கொண்டவோர் ஆலோசனைக் கூட்டத்தை, விபுலானந்தர் அடிகளார் நிறுவிய சிவானந்தர் வித்தியாலயத்தில் விபுலானந்த மணிமண்டபத்தில் பேராசிரியர் 'வித்தி' ஒரு நாள் மாலை கூட்டியிருந்தார். அழைப்பையேற்று நானும் அங்கு சென்றிருந்தேன். அனைத்துலக மகாநாட்டுப் பிரமுகர் திரு. வி. எஸ். துரைராஜா அவர்களும் அங்கு சமுகமளித்திருந்தார். பிராந்திய மகாநாட்டு அமைப்புக் குழுத் தெரிவில் தலைவராக டாக்டர் செல்லையா அவர்களைப் பிரேரித்த பேராசிரியர் பின்பு அதன் செயலாளராக எனது பெயரைப் பிரேரித்தபோது ஒருகணம் நான் திடுக்கிட்டுப் போனேன். அப்பாரிய பொறுப்பை ஏற்க உடனடியாக மறுத்துவிட்டேன். ஆனல் பேராசிரியர் 'வித்தி'யோ விட்டபாடில்லை. இறுதியில் அவரது அன்புக் கட்டளைக்கு நான் அடிபணியவேண்டியே நேரிட்டது. அவரது ஆக்க பூர்வமான ஆலோசனைகளுடனும் ஆதரவுடனும் அமைப்புக் குழுவினரின் பூரண ஒத்துழைப்புடனும் மலைபோற் தோன்றிய மகாநாட்டு வேலைப் பளுவை வெற்றிகரமாக நிறைவேற்ற முடிந்தது.

1982ம் ஆண்டில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினர் பேராசிரியர் 'வித்தி' அவர்களது தலைமையில் வானொலியில் இடம் பெற்றவோர் இலக்கியக் கருத்தரங்கில் பங்கு பற்றுமாறு அழைக்கப்பட்டிருந்தேன். என்னுடன் கலாநிதி மௌனகுரு அவர்களும் திரு. ஏ. ரி. பொன்னுத்துரை அவர்களும் வந்திருந்தார்கள். விடயம்: நவீன நாடகங்களும் மரபுக் கலைகளும். அக் கருத்தரங்கின் மூலம் மட்டுநகர் கலைகளின் மீதும் மக்கள் மீதும் பேராசிரியர் அவர்கள் கொண்டிருந்த பரிவையும் பாசத்தையும் நாமெல்லாம் நன்குணரமுடிந்தது. நம் பாரம்பரிய கலைகளுக்கு கைகொடுத்துத் தூக்கிவிட்ட அன்னாரது நற்பணி, மட்டுநகர் மக்களது இதயங்களில் என்றென்றும் பசுமை நிறைந்ததாகவேயிருக்குமென்பது நிச்சயம், ○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எல்லாம் நிறைவேறிற்று

வாழ்க்கைக்குப் பொருளுண்டு; அர்த்தமுண்டு; நோக்கமுண்டு.

ஒவ்வொருவரும் தன் வாழ்க்கையின் பொருளை, அர்த்தத்தை உணர்ந்து வாழும் பொழுதுதான் வாழ்க்கையில் விருப்புவரும். கொண்ட அர்த்தத்திற்காக வாழவேண்டும் என்ற துடிப்பும் வரும்.

ஒருவர் தான் கொண்ட நோக்கத்திற்காக வாழ்வார் என்றால் அதற்காக அவர் சாவர் என்பதும் பொருள். இது ஒரு தற்செயலான சம்பவம் அல்ல. ஆழ்ந்த சிந்தனைக்குப்பின் தெளிந்த தீர்மானத்தில் உதித்த ஒரு தியாகம்.

அர்த்தம் நோக்கமாகி, நோக்கம் வாழ்க்கையின் அழைப்பாக விடுக்கப்படுகிறது. எல்லோருக்கும் அழைப்பு உண்டு. ஆளுக்கு ஆள் அழைப்பு வேறுபடுகிறது.

ஒருவர் தனது அழைப்பை உணர்ந்து ஏற்று வாழும்பொழுதுதான் வாழ்க்கை பூரணமாகும்; வாழ்ந்தேன் என்ற திருப்தி பெருகும், அமைதி நிலவும். மகிழ்ச்சி நிறையும்.

தனது அழைப்பை நிறைவேற்றினார் இயேசு
விளைவு - மனித குலத்தின் விடுதலை -
நிறைவு - மகிழ்ச்சி.

இயேசுவின் அழைப்பு என்ன என்பதை விளக்கிக் கூறுவதுதான் சிலுவை மரம். அம் மரத்தில் இயேசு.

சிலுவையில் தொங்குகிறார் இயேசு.

அவ்வழி சென்றவரும் நின்றவரும் எள்ளி நகைத்தனர் இயேசுவை, நிந்தை அவமானப் பேச்சுக்கள் அவர்மேல் மாரியாய்ப் பொழிந்தன.

சற்றுப்பின்...
சந்தடிகள் ஓய்ந்தன.
எங்கும் நிசப்தம்.
இருளும் சூழ்ந்தது.

அந்த அந்தகாரத்தைக் கிழித்துக் கொண்டு இயேசுவின் ஆழ்ந்த குரல் எழுகிறது.



''ஆண்டவரே!
ஆண்டவரே! ஏன் என்னைக் கைவிட்டீர்?''

எல்லாம் நிறைவேறிற்று
என்று அறிந்த இயேசு,
''நான் தாகமாக
இருக்கிறேன்''

இமைகள் கண்களை
மூடுகின்றன.

அவர் கன்னம்
சாய்விடம் கேட்கின்றது.

தானாக இருக்க அதற்குத்
திராணி இல்லை.

மார்பும் அதற்கு அடைக்
கலம் கொடுக்கிறது.

நடந்தவை அனைத்தும் இயேசுவின் கண்ணுள்
நிறைகிறது.

இயேசுவின் வாழ்க்கை வரலாறு அவர் விழித்
திரையில் விழுகிறது.

கடவுளோடு அவர் ஆழ்ந்த செபத்தில் மூழ்கு
கின்றார்.

''தந்தாய்! துன்புற்றுக் காப்பவனாக, மனிதரின் விடுதலைக்குப் பலியாகும் செம்மறியாக நீர் என்னைத் தெரிந்தெடுத்தீர்...

ஆம் தந்தாய், அதை நான் ஏற்றுக் கொண்டேன். இது உனது விருப்பம். இதுதான் எனது அழைப்பு. நீர் எனக்குக் கொடுத்த வேலை. அது நிறைவேறிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மார்கழிக் குளிரினில் மாடடைத் தொழுவினில் பாதுகாப்பு எதுவும் இன்றி யாரும் விரும்பாத, வேண்டாத மகவாக நான் பிறக்க வேண்டுமென்று நீர் விரும்பினீர்.

தந்தாய்! என்னுடைய விருப்பத்தை அல்ல. உன்னுடைய விருப்பத்தையே நிறைவேற்றி னேன். உனது விருப்பம் நிறைவேறியதில் நான் பூரிப்படைகிறேன்.

பிறப்பிலே இருந்தே நான் துன்புறுத் தப்படவும், வெறுக்கப்படவும் வேண் டும் என்பது உனது விருப்பமாக இருந் தது. அனுதரவற்றவனாய் எனது ஊரிலே, உறவினர்களிடையே ஏற்றுக் கொள்ளப்படாதவனாய் நான் வாழ நீர் விரும்பினீர்.

தந்தாய் அதை நான் ஏற்றுக்கொண்டேன். அது நிறைவேறிற்று. சாந்தி பெறுகிறேன்.

30 ஆண்டுகளாக தாய் தந்தையருக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்பது உனது விருப்பாக இருந்தது.

இது எனது அழைப்பு. அது நிறைவேறிற்று. சாந்தி பெறுகிறேன்.

யோர்தானிலே என்னை ஞானஸ்ஞானம் பெற அழைத்தீர். பாவியோடு பாவி யாய் நானும் அங்கு நின்றேன். அங்கு, உனது சித்தத்தை எனக்கு வெளிப் படுத்தினீர். எனது மனதையும் சிந்தை யையும் திறந்து எனது அழைப்பை எனக்குத் தெளிவுபடுத்தினீர். மனித ரின் மீட்பிற்காக நான் பலியாக வேண் டும் என்பது தெட்டத்தெளிவானது.

என்னை நீர் அழைத்ததன் முழுமையை யும் எனது அழைப்பின் சிறப்பையும் நான் உணர்ந்தேன்.

தந்தாய், உனது அழைப்பை நான் முழுமை யாக ஏற்றேன். அது நிறைவேறிற்று. நான் சாந்தி பெறுகிறேன்.

தந்தாய்!

எளியோர்க்கு நற்செய்தி அறிவிக்கவும்
குருடர் பார்வை பெறுவர்
சிறைப்பட்டோர் விடுதலை அடைவர்
என முழங்கவும் நீர் என்னை அழைத் தீர்.

எனது தாயின் வயிற்றிலிருந்தே இதற்காக என்னை அழைத்தீர். அது நிறைவேறிற்று. நான் சாந்தி பெறுகிறேன்...

இத்தனையும் கூறியதும் இயேசுவின் மூச்சு சற்று ஆழமாகவும் கஷ்டமாகவும் தென்படு கிறது. ஒரு இடைவெளி......

பின்,

தந்தாய்! இரத்த வியர்வை நான் சிந்த, ஈட்டியாற் குத்துண்டு, கசப் பான காடியைக் குடித்து, முள்முடியை நான் சூடவேண்டும் என்று நீர் விரும்பி னீர்.

அது நிறைவேறிற்று. நான் சாந்தி பெறுகி றேன்.

---

### செ. தேவராசா சே. ச.

---

கசை அடிகள் வேண்டி, தள்ளாடித் தரையிலே வீழ்ந்து சிலுவையைச் சுமந்துகொண்டு கல்வாரிமலை வரைக் கும் நான் செல்வது உனது விருப்ப மாக இருந்தது. சிலுவையில் நான் அறையப்படுவது உனது விருப்பமாக இருந்தது.

இதோ!

நான் ஆணிகளில் சிலுவைதனில் தொங் குகின்றேன். இது நடந்தது. எல்லாம் நிறைவேறிற்று.

தந்தாய்!

நான் சோர்ந்து போனேன்.
மரணத்தின் வாசலில் நின்றேன்.
ஆனல், என்னை யாராலும் ஆக்கிரமிக்க முடியவில்லை;

தொடர்ச்சி 20ம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விடிவு

ஒவ்வொரு நாளுக்கும் — பருவத்திற்கும் ஒவ்வொரு அமைப்புக்களும் — அரசும் ஏதோ ஒன்றைச் சொல்லியே காலத்தையும் — மக்களையும் கடத்துகின்றது.

விடிவு — வார்த்தைகளிலா / வாழ்க்கை முறையிலா?

விடிவு — உரிமை மறுப்பிலா / ஏற்பிலா?

விடிவு — கொலைகளிலா / ஒப்புரவுகளிலா?

ஏற்படுகின்றது, ஏற்படுத்தப்படுகின்றது என்பது தான் இன்றைய மக்கள் அனைத்துப் பேரினதும் ஏக்கமாகும்.

இலங்கையின் வடக்கு, கிழக்கு மக்கள் விடிவுக்காக விரயமாக்கிய காலங்களை, கோரிக்கைகளை விளங்கிக்கொள்ள விரும்பாத அல்லது வேண்டுமென்றே செவிகளை, கண்களை கட்டி இருந்த இந்த நாட்டின் மொழிவாரியான பெரும்பான்மை மக்கள் இன்று அவர்களின் விடிவுக்காகவும் ஏங்குகிறார்கள்.

வடக்கு, கிழக்குப் பயங்கரவாதம் தவிர தென்னிலங்கைப் பயங்கரவாதம் தீவின் ஏனைய பகுதிகளுக்கும் பரவி சாதாரண வாழ்க்கை நிலைகளைப் பாதிப்பதை உணரும் மக்கள் மிகவும் வேதனையடைகின்றனர்.




பாடசாலைப் பகிஷ்கரிப்புக்கள்

கதவடைப்புக்கள் — கர்த்தால்கள்

படுகொலைகள் — கொள்ளைகள்

பண வழங்கல்கள் — பறிவாங்கல்கள்

இவ்வாறு அனைத்து நடவடிக்கைகளையும் உய்த்துணருகிறார்கள்.

மற்றவன் பிரச்சினைகளை விளங்கி உரிய காலத்தில், தகுந்த தீர்வுகளை வழங்க ஆதரவு வழங்காத நிலையால் தான் இன்று அவர்கள் பக்கமும் இந்நிலை திரும்பியுள்ளது. இவ்வுண்மையை எம்மவர்களும் விளங்கிக்கொள்ள இன்னும் எவ்வளவு காலம் வேண்டும் என்பது பெரும் கேள்விக் குறியாகும்.

• கலேபுலகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

திருகோணமலை - மட்டக்களப்பு இளைஞர் ஆணைக்குழு ஆரம்பமாகிப் பத்து ஆண்டுகளை முடித்துக் கொள்கிறது. 19-02-1989ம் திகதி 10வது ஆண்டு நிறைவு நாளாகும்.

இப்பத்தாண்டு காலகட்டத்திலும், பல நூற்றுப்பேர் வாழ்வில் பல மட்டங்களிலும், நிலைகளிலும் வாழ்ந்து நின்றோரும், வாழ்ந்து நிற்போரும், எமக்குப் பல விதத்திலும் ஆதரவு நல்கி, ஆலோசனை வழங்கி, ஊக்கப்படுத்தி உதவிகள் புரிந்து நின்றனர். அது மட்டுமல்ல சில முனைகளில் சில எதிர்ப்புகளையும் நாம் சந்திக்க நேர்ந்தது. ஆனால், அவை எம்மை இன்னும் இறுகப்பிணைந்த உணர்வோடு செயற்பட வாய்ப்பைத் தந்தன.

இச்சந்தர்ப்பத்தில், கடந்த காலத்தினை நினைவு மீட்டிப் பார்க்கிறோம். எம்மோடு தோள் நின்ற அத்தனை அன்பு நெஞ்சங்களுக் ஆணைக்குழுவின் அமைப்பை வடிவமைப்பதில் முக்கிய பங்காற்றிய அருட்தந்தை டானியல் சே. ச. அவர்களையும், நன்றிகூறிப் பெருமை செய்கின்றோம்.

இன்னும் விசேடமாக, எமது ஆணைக்குழுவின் பிரதம பொறுப்பாளரான முன்னாள் ஆயர் L. R. அன்ரனி ஆண்டகைக்கும், இன்னாள் ஆயர். கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகைக்கும் நன்றி வந்தனம் நல்கும் நாம், கடந்த சில வருடங்களாக உங்களையெல்லாம் ''இளைஞர் அரங்கத்தினூடே சந்திக்கும் வாய்ப்புத் தந்து வரும் ''தொண்டன்'' சஞ்சிகைக்கும் எமது நன்றிகளைக் கூறி நிற்கின்றோம்.

தொடர்ந்து வரும் காலத்திலும் எமது சேவை வளம் பெருகவும், இளைஞர் வாழ்வில் மாற்றந் தரும் பணி வளரவும் உங்கள்

# சகாப்தம் காண்போம்

கும் எமது நன்றியைக் காணிக்கையாக்குகின்றோம். குறிப்பாக அமரத்துவம் எய்தி அழியாது நினைவில் நிலைத்து வாழும் அல்போன்ஸ் தியாகராஜா அடிகளார், சந்திரா பெர்ணாண்டோ அடிகளார் இருவரையும் நெஞ்சில் நிறுத்தி நன்றிப் பண் இசைக்கிறோம்.

மேலும், திருகோணமலை - மட்டுநகர் இளைஞர் ஆணைக்குழுவின் நலன்விரும்பிகள் ஒவ்வொருவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி நவில்கின்றோம். இக்காலகட்டத்தில் நாம் சம்பந்தப்பட்டவரை உறவு கொண்டாடிய சகல பங்குத்தந்தையர்களுக்கும், சந்நியாச சபையினர்க்கும், பாடசாலைகளின் அதிபர்களுக்கும், சமூகசேவை ஸ்தாபனங்களின் தலைவர்கள், உறுப்பினர்களுக்கும், பாடசாலை மாணவ மாணவியர் மற்றும் பல்கலைக்கழக மாணவ மாணவியருக்கும், இளையர் அமைப்புக்களின் உறுப்பினர் சகலருக்கும் எமது நெஞ்சில் ஊறிவரும் நன்றிப்பெருக்கை அர்ப்பணமாக்குகிறோம். இந்நிலையில் எமது ஆதரவையும், ஆலோசனையையும் ஒத்துழைப்பையும், மேலாக, உங்கள் செபங்களையும் வேண்டுகிறோம்,

நன்றி!

திரு. மட் இளைஞர் ஆணைக்குழு.

---

அரை மனதுடன் செய்யும் வேலை முழுத் தோல்வியைத் தரும். முழு மனதுடன் செய்யும் வேலை வெற்றியைத் தரும். அதிலும் சிறப்பான வெற்றியாக இருக்கும்.

- எவ். ரொபட்சன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு

# ஓராண்டுச் சாதனைகள் சில....

1988ம் ஆண்டில் தைத் திங்கள் முதல் மார்கழி மாதம் வரையிலும் புரட்டாதி மாதம் நீங்கலாக ஆணைக்குழு செயற்பட்டு வந்தது. பங்குத் தளங்களில் இளைஞர்களைச் சந்திக்கும் எமது முயற்சி புளியந்தீவு, அக்கரைப்பற்று, தாளங்குடா, வீச்சுக்கல்முனை, இருதயபுரம் ஆகிய இடங்களில் கைகூடியது.

இவை தவிர, அத்துற எனும் கிராமத்தில் மெதடிஸ்த இளைஞருக்கான பாசறையையும், கோட்டைமுனை மெதடிஸ்த இளைஞருக்கான ஒரு நாள் நிகழ்ச்சியையும் நாம் நடாத்தி வைத்தோம்.

மாணவ, மாணவியர் நலனில் எமது கூடிய கவனம் இவ்வாண்டில் செலுத்தப்பட்டது. அக்கரைப்பற்று மாணவ தலைவர்களுக்கான நிகழ்ச்சி, கல்முனை, கார்மல் பாத்திமா கல்லூரி மாணவ தலைவர் நிகழ்ச்சி, ஏருவூர் அலிகார் மகா வித்தியாலய மாணவ தலைவர் நிகழ்ச்சி, தன்னாமுனை மகா வித்தியாலய மாணவர் நிகழ்ச்சி, இவை தவிர, மட்டக்களப்பு மாணவ நலன்புரிச் சங்க மாணவ முதல்வர் நிகழ்ச்சி, பல்கலைக்கழக மாணவர் பயிற்சிப் பாசறை ஆகியவற்றை நாம் பெருமையோடு சொல்லிக்கொள்ள முடியும்.

தொண்டர் தாபனங்களைப் பொறுத்த மட்டில் 'றெட்பார்ன' இயக்கம் எம்மோடு கொண்டிருந்த தொடர்பின் பயனாக, அவர்களது 'களத்தொண்டர்களுக்கான பயிற்சிப் பாசறை'யில் எமது பங்கைச் செலுத்த முடிந்தது.

மேலும், கடந்த வருடம் இரு முக்கிய விழாக்களை கலை நிகழ்ச்சிகளோடு கூட நாம் சிறு அளவில் ஏற்பாடு பண்ணியிருந்தோம். பங்குனித்திங்கள் 27ம் நாள் ஞாயிறுதினமன்று - குருத்தோலை விழாவன்று, திருச்சபையின் பணிப்பின் பேரில் இளைஞர் தின விழாவும், மார்கழித் திங்கள் 28ம் நாள் ஒளிவிழாவும் இவை இரண்டுமாகும்.

இன்னும் தியாகத்தொண்டன் சந்திரா பெர்னாண்டோ அடிகளின் நினைவஞ்சலியாக, வெளியிடப்பட்ட அஞ்சலி அறிக்கைகளைத் தொகுத்து நூலுருவில் தந்தோம்.

இவ்வத்தனை நிகழ்ச்சிகளின் மூலமும் செயற்பாடுகளின் மூலமும் சுமார் 1,500 இளைஞர்களுடன் 1988ம் ஆண்டில் நேரடித்தொடர்பை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது.

- திரி. மட். இளைஞர் ஆணைக்குழு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மாணவர் பக்கம்

# அப்போஸ்தல பணி - VIII

க. பொ. த. உயர்தரம்

சின்னப்பருக்கு தொடர்ந்து சைப்பிரசில் நிற்பது எண்ணமில்லை. அவரும் அவருடன் இருந்தவர்களும் சின்ன ஆசியாவிலுள்ள பெர்கே துறையை அடைந்தனர். மாற்கு எனும் அருளப்பர் அவர்களை விட்டுப் பிரிந்தார். ஏன் திரும்பினுர் என்று தெரியவில்லை. ஆயினும் சின்னப்பர் இதையிட்டு ஆத்திரமடைந்திருந்தார் என்பது உண்மை.

**பிசிதியா நாட்டு அந்தியோக்கியா** சின்னப்பரும் பர்னபாவும் தொடர்ந்து பயணம் செய்து பிசிதியா நாட்டு அந்தியோக்கியா வந்து சேர்ந்தனர். அது ஒரு கிரேக்க நகரம். அங்கு உரோமைப் படையிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் குடும்பத்தினரும் வாழ்ந்தனர். யூதர்களும் அதிகமாக வாழ்ந்தனர். யூதர்களுக்குப் பல செபக்கூடங்களும் இருந்தன. அத்தகைய ஒரு செபக்கூடத்திற்கு சின்னப்பரும் பர்னபாவும் சென்றனர். செபக்கூடத்தின் தலைமைப் போதகன் அந்நியர் சிலர் வந்திருப்பதைக் கண்டு, வழமைப்படி அவர்களுக்கும் பேச வாய்ப்பளித்தான். சின்னப்பர் கைதேர்ந்த போதகனுக இருந்ததால் சந்தர்ப்பத்தைத் தகுந்த முறையில் பயன்படுத்தினுர்.

சின்னப்பருடைய உரை ஏறக்குறைய முடியப்பர் தலைமைச் சங்கத்துக்கு முன் ஆற்றிய உரை போன்றிருந்தது. யூதர்களுடைய வரலாற்றை எடுத்துக்கூறி நசரேத்தூர் இயேசு இறைவாக்குகளை நிறைவேற்றுபவராகவும் வாக்களிக்கப்பட்ட மெசியாவாகவும் இருக்கிறுர் என்பதை எண்பித்தார். சபை மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தது. அவர் பேசி முடிந்ததும் மீண்டும் அவரது உரையைக் கேட்க விரும்புவதாகத் தெரிவித்தனர். அடுத்த ஓய்வு நாளில் வந்து உரையாற்றுவதாக வாக்களிக்கின்றுர்.

**புற இனத்தவரிடம் செல்கிறோம்** அந்த ஒரு வாரத்துக்குள் பூகம்பம் ஒன்று உருவாகியது. யூதர்கள் சின்னப்பரின் வார்த்தைகள் அபாயமானவை என்பதை உணர்ந்தனர். ஏனெனில் புற இனத்தவர்கள் யேசுவை மெசியாவாக ஏற்பதில் எவ்வித ஆபத்தையும் உணரவில்லை. ஆனுல் யூதர்களுக்கு அது தேவதூஷணமாக இருந்தது. எனவே அடுத்த ஓம்வு நாளுக்கு சின்னப்பருக்கெதிரான போராட்டத்தில் இறங்க ஆயத்தம் செய்தனர். சின்னப்பர் பேச எழுந்தபோது இடைமறித்தனர். வன்முறையான போராட்டத்தில் இறங்கினர்.

இச்செயலினுல் சின்னப்பர் ஆத்திரமடைந்தவராகவும், ஏமாற்றமடைந்தவராகவும் காணப்பட்டார். ''நல்லது, யூதர்களாகிய நீங்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால் நாங்கள் புறவினத்தாரிடம் செல்கிறோம்'' என்று கூறிவிட்டு அவரும் பர்னபாவும் செபக்கூடத்தை விட்டு வெளியேறினர்.

அடுத்த சில வாரங்களில் கடவுள் பயமுள்ள சிலரையும் புனவினத்தாரையும் செபக்கூடங்களுக்கு வெளியே சந்தித்து உரையாடினர். பலர் விசுவசித்தனர். ஒரு குட்டித் திருச்சபை அங்கு உருவாகியது. இதையறிந்த யூதர்கள் நிம்மதியை இழந்தனர், யூத மதத்தைத் தழுவிய பெருங்குடிப் பெண்டிரைத் தூண்டிவிட்டு அவர்கள் கணவர்மூலம் கலகம் செய்தனர். நகரப் பெரியோர் சின்னப்பரையும் பர்னபாவையும் நகரை விட்டுச் செல்லுமாறு கட்டளையிட்டனர். எனவே அவர்கள் இருவரும் எதிர்ப்பின் அடையாளமாகத் தம் காலிலிருந்த தூசியைத் தட்டிவிட்டு வெளியேறினர்.

**லிஸ்திரா** சின்னப்பரும் பர்னபாவும் பிசிதியா நாட்டு அந்தியோக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

யாவை விட்டுப் புறப்பட்டு இக்கோனியாவை அடைந்தனர். முதலில் யூதர்களின் செபக் கூடங்களுக்குச் சென்றனர். ஏனெனில் தன் இனத்தவரான யூதரைப் புறக்கணிக்க அவர் விரும்பவில்லை. அங்கும் சின்னப்பருக்கு எதிர்ப்பே கிடைத்தது. யூதர்கள் கலகம் செய்யத் திட்டமிட்டனர். நகரம் பிளவு பட்டதாலும், பெரியதொரு குழப்பம் எதிர் பார்க்கப்பட்டதாலும், இக்கோனியாவை விட்டுப் புறப்பட்டு லிஸ்திரா மலைகளினூடாகச் சென்று லிஸ்திராவை அடைந்தனர்.

லிஸ்திராவில் செபக்கூடம் இருந்ததாகத் தெரியவில்லை. லிஸ்திரா இக்கோனியாவை விட சிறிய நகரமாக இருந்தது. ஏறக்குறைய நான்கு அல்லது ஐந்து மாதங்கள் அங்கு பகிரங்கமாக சின்னப்பர் போதித்தார். எவ்வித எதிர்ப்பும் அவரைத் தடைசெய்யவில்லை. இங்குதான் சின்னப்பரின் முதல் புதுமை இடம்பெற்றது. பிறவி முடவனாக இருந்த மனிதனைக் கண்டு, இரக்கப்பட்டு, அவனிடம் விசுவாசம் இருந்ததை உணர்ந்து அவனை எழுந்து நிற்கும்படி கட்டளையிட்டார். அவன் எழுந்து நின்றான். நடக்கத் தொடங்கினான்.

**நாங்கள் கடவுள் அல்ல - சாதாரன மனிதர்கள்** பிறவி முடவன் நடக்கத் தொடங்கியதைக் கண்ட அந்நகர மக்கள் ''தெய்வங்களே மனித உருவில் வந்துவிட்டன'' எனத் தங்கள் மொழியில் கத்தத் தொடங்கினர். பர்னபாவை 'யுப்பிற்றர்' என்றும், சின்னப்பரை 'மெர்க்குரி' என்றும் கருதினர். உரோமையரின் தெய்வங்களுக்கெல்லாம் தலைவனாக யுப்பிற்றர் விளங்கினார். கிரேக்கர் கூட 'செயுஸ்' என்று அவரை அழைத்தனர். கிரேக்க புராணக் கதையின்படி யுப்பிற்றர், மாயா என்பவர்களின் புதல்வன் தான் 'மெர்க்குரி'. தெய்வங்களின் தூதுவனான மெர்க்குரி சிறந்த பேச்சாளனாகவும் இருந்தார். பர்னபா வயது முதிர்ந்தவராக இருந்ததால் அவரை யுப்பிற்றர் எனவும், சின்னப்பர் இளைஞனாகவும், பேச்சாளனாகவும் இருந்ததால் அவரை மெர்க்குரி எனவும் மக்கள் நினைந்தனர்.

மற்றுமொரு புராணக் கதையின்படி லிஸ்திராவுக்கு ஒரு தடவை வந்த இரு தெய்வங்களை அந்நகர மக்கள் மிகக் கொடுமையாக நடத்தியதால் அவர்கள் திரும்பிச் சென்று பெரு வெள்ளத்தை அனுப்பி அந்நகர மக்களைத் தண்டித்ததாகக் கூறப்பட்டுள்ளது. அத்தகைய அழிவு மீண்டும் தங்கள் நாட்டுக்கு வரக்கூடாது என்று எண்ணி நகரப் பெரியவர்கள் யுப்பிற்றரின் ஆலயத்துக்குச் சென்று பலி செலுத்த ஆயத்தம் செய்தனர். மக்கள் தங்களைக் கடவுளாகக் கருதி விட்டனர் என சின்னப்பரும் பர்னபாவும் உணர்ந்து அவர்கள் பலி செலுத்துவதைத் தடை செய்ய கூட்டத்தை விலக்கிக்கொண்டு ஆலயத்துக்குள் புகுந்து, ''நாங்கள் கடவுள் அல்ல. உங்களைப் போன்ற சாதாரண மனிதர்கள் தான்'' என்று கத்திக்கொண்டு அது பற்றிய தங்களது ஆழ்ந்த துக்கத்தின் அடையாளமாக தங்கள் ஆடைகளையும் கிழித்துக்கொண்டனர்.

**லிஸ்திராவில் எதிர்ப்பு** இதனால் மக்கள் எவ்வளவு ஏமாற்றம் அடைந்திருப்பர் என ஒருவாறு ஊகிக்கலாம். பலி செலுத்துவதால் ஆலயச் செலவில் தங்களுக்குக் கிடைக்கவிருந்த சிறிய மகிழ்ச்சிக் கொண்டாட்டமும் இல்லாமல் போனது அவர்களுக்கு ஆத்திரத்தை அளித்தது. இவ்வேளையில் பிசிதியா நாட்டு அந்தியோக்கியாவிலிருந்தும் இக்கோனியாவிலிருந்தும் லிஸ்திராவுக்கு வந்திருந்த யூதர்கள், சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சின்னப்பரும் பர்னபாவும் சட்டங்களை மீறுகின்றவர்கள், குழப்பம் உண்டாக்குகின்றவர்கள் என்ற வதந்தியைப் பரப்பிவிட்டனர். அவ்வளவுதான் தாமதம், கற்கள், நான்கு பக்கமிருந்து பறந்தன. சின்னப்பரைத் தாக்கிய ஒரு கல் அவரைத் தரை சாய்த்தது. கிறிஸ்தவ நெறியை ஏற்றுக் கொண்ட ஒரு சிலர் விழுந்து கிடந்த சின்னப்பரைச் சுற்றி பாதுகாப்பாக நின்றதால் கூட்டம் கலைந்தது. சிறிது நேரத்தில் சின்னப்பர் தன்னுணர்வு பெற்று எழுந்தார். மறுநாள் பக்கத்து நகரமான தெர்பைக்குச் சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முதல் பயண முடிவு அந்தியோக்கியாவுக்கு திரும்ப வேண்டிய காலம் நெருங்கி விட்டது என்பதை சின்னப்பர் உணர்ந்தார் - தெர்பைக்கு அண்மையிலிருந்த சின்னப்பரின் பிறப்பிடமான தார்சு வழியாக அந்தியோக்கியாவுக்கு விரைவாகச் சென்றிருக்கலாம். ஆயினும் சின்னப்பர் வந்த வழியாகவே மீண்டும் செல்லத் தீர்மானித்தார். ஏனெனில் லிஸ்திரா, இக்கோணியா, பிசிதியா நாட்டு அந்தியோக்கியா போன்ற இடங்களில் தாம் ஏற்படுத்திய சபைகளை மீண்டும் தரிசித்து அவற்றை மேலும் ஊக்குவிக்க வேண்டும் என்ற எண்ணமாயிருந்தார்.

சின்னப்பர் சிறந்த அமைப்பாளராக இருந்ததால் அவரும் பர்னபாவும் தாங்கள் நற்செய்தி அறிவித்த இடங்களிலெல்லாம் சரியான போதனையையும், தகுந்த நிர்வாகத்தையும் நடத்தவல்லமூப்பர்களை நியமித்தனர் இத்தகைய மூப்பர்கள் பின்னர் தங்களுக்குரிய உதவியாளர்களையும், ஆசிரியர்களையும் போதகர்களையும் பயிற்சியளிப்பர். ஒவ்வொரு இடத்திலும் ஒரு சில நாட்கள் தங்கிவிட்டு இத்தாலியா வந்து கப்பலேறி சீரியா நாட்டு அந்தியோக்கியா வந்து சேர்ந்தார்.

மீள வந்த சின்னப்பரையும், பர்னபாவையும் கண்ட அந்தியோக்கு திருச்சபை மகிழ்ந்தது. அவர்கள் இருவரும் தங்கள் பயணம் பற்றிய கதைகளை எடுத்துரைத்தனர் புறவினத்தவரின் உலகிற்கு திருச்சபை பரவிவிட்டது என்ற மகிழ்ச்சியில் அனைவரும் திளைத்திருந்தனர். ஜெருசலேம் திருச்சபையுடன் மிகச்சிறிய தொடர்புகளை மட்டுமுடைய புறவினத்திருச்சபையான அந்தியோக்கிய திருச்சபை இவ்விதமாக வளர்ச்சியுற்றது.

## வினாக்கள்:

1. புனித சின்னப்பரின் முதல் முறை மறைபரப்புப்பணிப் பிரயாணத்தின் போது அவர் சென்ற இடங்களைக் குறிப்பிடுக?
2. ''சூழ்ச்சியும், வஞ்சகமும் உருவானவனே, அலகையின் வழி வந்தவனே, நன்மையானதற்கெல்லாம் பகைவனே, ஆண்டவரின் நேர்மை வழியைப் புரட்டுவதை விட்டுவிட மாட்டாயா.'' இதை விபரிக்க?
3. லிஸ்திராவில் சின்னப்பர் பிறவி முடவனைக் குணமாக்கிய நிகழ்ச்சியை உமது வார்த்தையில் விபரிக்குக?
4. சந்தர்ப்பம் கூறுக? ''யூதர்களாகிய நீங்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டால் நாங்கள் புறவினத்தாரிடம் செல்கிறோம்''?
5. சின்னப்பர் தம் காலிலிருந்த தூசியைத்தட்ட விளைந்த சந்தர்ப்பம் என்ன?
6. சின்னப்பரையும், பர்னபாவையும் எவர்களென லிஸ்திரா மக்கள் கருதினர்?
7. சின்னப்பர் லிஸ்திராவில் கல்லால் எறியப்பட்டதற்கான காரணம் என்ன?
8. பயண முடிவில் வந்த வழியிலேயே மீண்டும் செல்ல சின்னப்பர் தீர்மானித்ததேன்?

---

(14ம் பக்கத் தொடர்ச்சி)

முறியடிக்க முடியவில்லை.
எல்லோரும் என்னைக் கைவிட்டு
விட்டனர்.

தனிமையில் நான் வருந்துகின்றேன். நான் உனது சித்தத்தை நிறைவேற்றிவிட்டேன். நான் மகிழ்ச்சி அடைகிறேன். அமைதியில் நான் குடிகொள்கிறேன். நீர் என்னை எதைச் செய்ய அழைத்தீரோ அதைச் செய்து முடித்தேன். நான் சாகவேண்டும். அதனால் மனிதர் வாழவேண்டும்.''

இயேசு மரணமாகிறார்.
இயேசுவின் வார்த்தைகள் உள்ளத்தை
உருக்குகிறது.
கண்களில் கண்ணீர் பனிக்கின்றன.
ஆனால், அதிலே ஓர் ஆனந்தம்.
அமைதி, நிறைவு.

இயேசுவின் வாழ்விலே அர்த்தம் இருந்தது. நோக்கம் இருந்தது. துன்பங்கள் சூழ்ந்த போதும், வாழ்வே இருளாகிச் சூனியமான போதும் இயேசு தனது அழைப்பை ஏற்று அதை முழுமையாக நிறைவேற்றினார்.

இத் தவக்காலத்திலே நாம் ஒவ்வொருவரும் நமது வாழ்வின் அர்த்தம் என்ன? நோக்கம் என்ன? நம் ஒவ்வொருவரின் தனி அழைப்பு என்ன என்பதை உணர்ந்து அதை ஏற்று வாழும் பொழுதுதான் இறை அரசை நம்மால் கட்டிஎழுப்ப முடியும். கிறிஸ்து தொடங்கியதை நாம் தொடர முடியும். நம் கிறிஸ்தவ வாழ்விலே அன்பு இருக்கும், மகிழ்ச்சி இருக்கும், தெளிவு இருக்கும். அமைதி இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கொழுந்து இரண்டு

## ஒரு இரசிக நோக்கு

மலையகத்திலிருந்து வெளிவருகின்ற ''கொழுந்து'' சஞ்சிகை தனது இரண்டாவது தளிரையும் விரித்துள்ளது. ஓராண்டுக்கு முன்னர் இதன் முதல் கொழுந்து வாசகர்களுக்காக விரிந்தது.

''இலக்கியமில்லாத சமூகம் இயக்கமில்லாத சமூகம் என்றும், இலக்கியமே தமது இலட்சியப்பணி. வாய்ச்சொல் வீரர்கள் அல்ல. சமுதாயப் பார்வையுள்ள சத்திய இளைஞர்களைத் தமது பயணத்தில் இணைத்துள்ளனர் என்னும் முழக்கத்தோடு இரண்டாவது கொழுந்துவெளிவந்துள்ளது.

தமது படைப்புக்களின் மூலமாக இந்த ஏடு என்னென்ன சாதிக்கப் போகிறது என்று பட்டியல் போட்டுத் தரும் உத்தேசம் கொழுந்துவுக்கு இல்லை. சமுதாயப் பார்வையுள்ள இலங்கியங்களைத் தான் அது தாங்கிவரும் என்பதைக் கொழுந்துவின் ஆசிரியதலையங்கம் சூசகமாகக் கூறுகிறது.

மலையகசமூகத்தின் கூட்டுப் பொறுப்பான கலாச்சாரத்தின் ஆழ அகலங்களையும் அவசரங்களையும் அல்லல்களையும் இலக்கியத்தில் வெளிக்கொணரும் முயற்சியாகக் கொழுந்து விரிந்துள்ளது.

கொட்டிக்கிடக்கும் தங்கச் சுரங்கம், மலையக தோட்டத் தொழிலாளர் ஓர் அறிமுகம் ஆகிய கட்டுரைகளை முறையே சாரல் நாடன், கலாநிதி க. அருணாசலம் ஆகியோர் எழுதியுள்ளனர். மலையக இந்திய வம்சாவழித் தமிழ் சமூகத்தின் வரலாறு, மொழி, இனம், கலாச்சாரத் தொடர்பு என்பவற்றை அறிந்து கொள்ள ஒரு முழுமையான நூல் இதுவரை வெளிவரவில்லை என்ற மன உளைச்சலை வெளிப்படுத்துகின்றார் சாரல் நாடன் இந்திய வம்சாவழி மக்கள் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை எழுதிய பலரது பிரகடனங்கள் போலித்தனமானவையும் உண்மைக்குப் புறம்பானவை என்பதையும் வெளிப்படுத்தியுள்ளார் சாரல் நாடன். இவரது கட்டுரை இம்மக்கள் தொடர்பான ஆய்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு வழிகாட்டியே எனலாம்.

கலாநிதி க. அருணாசலம் அவர்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் இன்றைய அவலம் இன்று நேற்று அல்ல, பல நூற்றாண்டுகளுக்கு முன்பேயே அரசியல் சமூகப் பொருளாதாரக் காரணிகளின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது என்பதைப் பல சான்றுகள் காட்டி நிறுவியுள்ளார். இளங்கோ வடிகள் முதல், சிறுகதையுலகின் முடிசூடா மன்னனாக விளங்கிய புதுமைப்பித்தன் வரை காட்டுகின்ற சமூகப் பொருளாதார, அரசியல் காரணிகளால் அமுக்கத்திற்குட்பட்ட மக்களின் எச்ச சொச்சங்களே மலையக தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள்

# நூல் விமர்சனம்

முனைவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என்பதை ஆதாரங்களுடன் விளக்குகின்றார். பொருளாதார ரீதியாக உச்சம் பெற்றிருந்த சிலர் பொருளாதார ரீதியாகப் பாதிப்புக்குட்பட்டிருந்த மக்களை நசுக்கி அடக்கியாள முற்பட்டதன் விளைவே மலையகத் தோட்டத் தொழிலாளரின் வருகைக்குக் காரணம் என்பதைக் கட்டுரையாசிரியர் துல்லியமாகக் காட்டியுள்ளார். பெரும்பாலான மலையக மக்கள் தாமே அறிந்திருக்க முடியாத பல அரிய உண்மைகளை இக்கட்டுரை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

''வௌவால் தகவல்கள்'' என்னும் இந்திரஜித்தின் கட்டுரை தலைகீழான தகவல்களைத் தரும் இலக்கியத் தகிடுதித்திக்காரர்களுக்கு சாட்டையாகவே உள்ளது. ''கம்பனி நியூஸ்'' பகுதியிலும் பெற்றெடுக்க முடியாத சிலர் தத்தெடுப்பதும் பின்னர் அவற்றைத் தாமே பெற்றெடுத்ததாகப் பம்மாத்துப் பண்ணுவதும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மலையகத்தின் பழம் பெரும் எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப்பின் அறிமுகத்துடன் 'கங்குலன்' எழுதிய 'குத்தகை' என்ற சிறுகதை வெளிவந்துள்ளது. உழைத்துழைத்தே உருக்குலைந்த மலையக மக்களின் அவாக்கள், எண்ணங்கள் என்பவற்றையும் இந்த நாடு அவர்களையும் இந்நாட்டை அவர்களும் எப்படி நேசித்தனர் என்பதையும் வெளிக்கொண்டுவரும் அதே வேளை தாய் நாட்டின் மீது இம் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைகளை தாயகம் தகர்க்க விருப்பதையும் மண் வாசனை கமழ எழுதியுள்ளார்.

சு. முரளிதரனின் ''வைர இதயத்து கறுப்பு இமயம்'', எம். நாமதேவனின் ''தேடுகிறார் ஓர் இடத்தை'' என்பன புதுமையும் மரபுமான இரு கவிதைகள். முன்னையது மண்டேலாவின் உள்ள உறுதியைச் சுட்டெரிக்கும் நெருப்புத்துண்டாகவும் உள்ளது. நாமதேவன் நமக்குப் புதுமையாக எதுவும் தரவில்லை.

பழைய மொந்தையில் புளித்துப்போன பழைய கள்ளையே ஊற்றித்தந்துள்ளார். அவரிடமிருந்து இன்னும் சிறப்பாகவே எதிர்பார்க்கின்றோம்.

கொழுந்தின் மைய நரம்பு மலையக சமூகமென்றால் ஏனைய ஒவ்வொரு நரம்பும் அவர்களது கலை, கலாச்சார, பொருளாதார, அரசியல் நிலைமைகளை எடுத்துக் கூறுகின்றன. அத்துடன் உலக அரங்கில் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் குரல் கொடுத்துள்ளது. புதுமைப்பித்தனின் எழுத்துலகப் பிரவேசமும் கு. நா. கவின் பணிகளையும் நினைவாக வெளியிட்டுள்ளது.

திரு. அந்தனி ஜீவாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் ''கொழுந்து'' மலையகத் தொழிலாளரின் விரக்திகள், வேதனைகள் என்பவற்றை வெளிக்கொணரும் அதேவேளை உலகில் மலர்ந்து வருகின்ற புதிய சிந்தனைப் போக்குகளையும் இனங்கண்டு கொள்ளும் என நம்பலாம். □


## தாளங்குடா சிறுவர் பாடசாலைகளின் நிதிக்காக நடத்தப்பட்ட ★ அதிஸ்ட இலாபச் சீட்டின் முடிவுகள் ★

1ம் பரிசு: இல. 780 ... V சுந்தரம், இ. மி. சபை, கல்முனை.
2ம் பரிசு: இல. 975 ... சிவா, M. V. றோட், தம்பிலுவில் - 2
3ம் பரிசு: இல. 1783 ... V, J. சாந்தி, 46/13, லிங்கநகர், திருமலை.

ஆறுதல் பரிசுகள் - 5

இல. 1300 ... பற்றிசியா A., 'டெலிக்' புனித மிக்கேல் கல்லூரி, மட்டு நகர்.
இல. 1801 ... செலஸ்ரின் கொஸ்மஸ், பெரிய உப்போடை, மட்டக்களப்பு.
இல. 1511 ... P. தியாகராஜா, பெரிய கல்லாறு.
இல. 1046 ... T. தெரேசா, தம்பிலுவில் - 1.
இல. 466 ... J. அமலன், பாத்திமாபுரம், காத்தான்குடி.

ஆதரவுக்கு நன்றி. பங்குத் தந்தை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலக்கியத்தின் உருவமும் உள்ளடக்கமும்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## உள்ளடக்கம் என்றால் என்ன?

ஓர் இலக்கியப் படைப்பு எதைப்பற்றியதோ அதுவே அதன் உள்ளடக்கம் எனலாம். இலக்கியத்தின் உள்ளடக்க மூலமாய் அமைவது வாழ்க்கை ஆகும்.

இலக்கியத்தில் வாழ்க்கையே உள்ளடக்கமாக அமைகின்றது என்று கூறும்பொழுது வாழ்க்கை என்றசொல் உணர்த்தும் பொருளை நாம் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். சாதாரண வழக்கில் நாம் வாழ்க்கை என்ற சொல்லைப் பயன்படுத்தும் பொருள் பரப்பில் இருந்து விரிந்த, பரந்ததோர் பொருள் பரப்பிலேயே 'வாழ்க்கை' என்ற சொல்லின் பொருள் இங்கே கையாளப்படுகின்றது.

ஓர் இலக்கியவாதி தன் ஐம்புலன்களின் துணைகொண்டு நேர்முறையாகவோ அல்லது நேரில் முறையாகவோ இப் புறவுலகில் கண்டும், கேட்டும், உணர்ந்தவையுமே இங்கு வாழ்க்கை என்ற சொல்லிற்குள் வந்து அமைகின்றது எனலாம்.

புற உலகே வாழ்க்கை என்ற வகையில் இலக்கியத்தின் உள்ளடக்கமாக அமையும் பொழுது ஏன் ஒரு வாழ்க்கை இரு படைப்பாளிகள் இடையே வெவ்வேறு உள்ளடக்கமாக வெளி வர வேண்டுமா என்ற கேள்வி எழுவது இயல்பே ஆகும்.

இக்கேள்விக்கு நாம் விடைகாண வேண்டுமாயின் இலக்கிய வாதிக்கும் வாழ்க்கைக்கும் இடையில் உள்ள தொடர்பை விளங்கிக் கொள்ள வேண்டும்.

இலக்கியம் வாழ்க்கையின் பிரதிபலிப்புத் தான். ஆனால் இலக்கியம் உருவம் காட்டும் கண்ணாடி அல்ல. கண்ணாடி சடப் பொருள். அது விருப்பு வெறுப்பு அற்றது. கண்ணாடி தன் முன்னால் உள்ள உருவத்தை உள்ளது உள்ளவாறு காட்டும். ஆனால் இலக்கியவாதி அவ்வாறு அல்ல. அவன் விருப்பு வெறுப்பு உடைய உணர்ச்சிப் பிறவி. எனவே அவன் தான் காணும் வாழ்வை உள்ளது உள்ளவாறு பிரதிபலித்துக் காட்டமாட்டான், அதாவது வாழ்வின் நேரடியான பிம்பமாக அவனுடைய இலக்கியப் படைப்பு அமையாது. பதிலாக தான் கண்ட வாழ்க்கையை தான் கண்ட கோணத்திலேயே அவன் தனது படைப்பில் வாழ்க்கையைப் பிரதிபலிப்பான். உதாரணமாகக் கொட்டும் மழை ஒரு படைப்பாளிக்கு இறைவனின் விந்தைச் செயலாகத் தெரியலாம். பிறிதொரு படைப்பாளிக்கு அது தொழிலாளிக்கு முதலாளி திட்டும் வசையாகத் தெரியலாம். ஆக, இங்கு இவ் விரு படைப்பாளிகளும் கண்ட வாழ்க்கை ''கொட்டும் மழை'' என்ற ஒரு வாழ்க்கையைத் தான். ஆயின் ஒருவனின் படைப்பில் அது தெய்வ விந்தையாகவும், மற்றவன் படைப்பில் அது முதலாளியின் வசையாகவும் வெவ்வேறு உள்ளடக்கமாகி விடுகின்றன. எனவேதான் இலக்கியத்தில் பிரதிபலிக்கப்படும் வாழ்க்கையை இரண்டாகக் காண வேண்டி உள்ளது.

1. படைப்பின் பிரதிபலிப்பிற்கு உள்ளான வாழ்க்கை.
2. படைப்பில் பிரதிபலிக்கப்பட்ட வாழ்க்கை.

'கொட்டும் மழை' படைப்பின் பிரதிபலிப்பிற்கு உள்ளான வாழ்க்கை என்றால் படைப்பில் பிரதிபலிக்கப்பட்ட வாழ்க்கை தெய்வ விந்தை அல்லது முதலாளியின் வசை என்பதாகும்.

ஒரு வாழ்க்கையில் இருந்து இலக்கிய வாதிகளிடையே வெவ்வேறு உள்ளடக்கம் வெளிவரக் காரணம் அவரவர்களின் தத்துவச் சார்பு எனலாம். அதாவது ஒவ்வொரு இலக்கியவாதியும் வாழ்க்கையை அணுகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முறை எனலாம். இதையே இலக்கியவாதியின் உலகக் கண்ணோட்டம் எனவும் கூறுவர். ஆன்மீக ஞானச் சார்பு மிகையாகக் கொண்ட இலக்கியவாதி கொட்டும் மழையை தெய்வ விந்தையாகக் காண்பான். வர்க்க அரசியல் அபிமானம் மிகையாக உடைய இலக்கியவாதி கொட்டும் மழையை தொழிலாளர் மீது முதலாளி திட்டும் வசையாகக் காண்பான்.

உள்ளடக்கம் என்னும்பொழுது இலக்கியப் படைப்பில் காணப்படும் 'மையக் கருத்து' என்ற விடயம் முக்கியமானது ஆகும். மையக் கருத்து என்பது, தான் கையாண்ட உள்ளடக்கத்தினூடாக இலக்கிய வாதி வெளிப்படுத்த விரும்பும் செய்தி அல்லது கருத்து எனலாம். உதாரணமாகத் தமிழர்கள் மத்தியில் காணப்படும் தீண்டாமையைக் கண்டித்து இரண்டு கவிஞர்கள் இரு கவிதை எழுதுகின்றனர். இங்கு படைப்பின் உள்ளடக்கம் தீண்டாமை என்ற விடயமாகும். இதில் ஒரு கவிஞன் ''தீண்டாமை ஓர் அநாகரீகச் செயல்'' எனக் கண்டிப்பதோடு நின்றுவிடலாம். பிறிதொரு கவிஞன் ''கொலை வாளை எடு தீண்டாமையைக் திணிக்கும் கொடியோர் செயலை அறு'' எனவும்பாடலாம். ஆக இவ்விருகவிதைகளும் தீண்டாமைக்கு எதிரான கவிதகளாக இருப்பினும் அதனை அவை பார்த்திருக்கும் பார்வையில் வேறுபாடு காணப்படுகிறது. அதாவது கவிஞர்கள் புலப்படுத்த விரும்பிய கருத்துக்களில் வேறுபாடு காணப்படுகிறது. இவ்வாறு இலக்கியங்களில் புலப்படுத்தப் படும் கருத்துக்களையே இலக்கியத்தின் மையக் கருத்து என்பர்.

ஒரு நல்ல இலக்கியப் படைப்பில் மையக் கருத்து என்பது ஆரம்பம் முதல் இறுதிவரை ஊடுருவி நிற்கவேண்டும். ஆரம்பம், வளர்ச்சி, உச்சி என படைப்பில் மையக்கருத்து வளர்க்கப்பட்டு இருத்தல் வேண்டும். மேலும் ஓர் இலக்கிய படைப்பில் அது புலப்படுத்தும் மையக்கருத்து படைப்பில் இருந்து வேறாகாது படைப்பில் இருந்து பிரித்தறியமுடியாதவாறு படைப்பில் இசைவாகமைந்து இருக்க வேண்டும்.

ஓர் இலக்கியப் படைப்புப் புலப்படுத்தும் மையக்கருத்து (செய்தி) உட்பதிந்து இருக்க வேண்டுமா அல்லது வெளிப்படையாக இருக்க வேண்டுமா என்ற கேள்விகள் இலக்கிய உலகில் எழுப்பப்படுவதுண்டு. ஆயின் இது அர்த்தமற்ற கேள்வியாகும். காரணம் படைப்பாளியின் உளப்பாங்கு, படைப்பின் வாசகர், படைப்பு வெளிவரும் சமூகச்சூழல், படைப்புக் கையாளும் உள்ளடக்கத்தின் தன்மை, படைப்பாளியின் நோக்கம் போன்ற விடயங்கள் ஒரு படைப்பின் செய்தி உட்பொதிந்து இருக்கவேண்டுமா, வெளிப்படையாக இருக்கவேண்டுமா என்பதைத் தீர்மானிக்கின்றன. எனவே ஓர் இலக்கியப் படைப்பில் செய்தி உட் பொதிந்தும் இருக்கலாம், வெளிப்படையாகவும் இருக்கலாம். பிரச்சனை என்னவென்றால் படைப்பு புலப்படுத்தும் செய்தி படைப்போடு இயைபுற அமைதல் வேண்டும் என்பதே ஆகும்.

இலக்கியம் பிரச்சாரமா இல்லையா என்ற கேள்வியும் இலக்கிய உலகில் உண்டு. இக்கேள்வி இலக்கியத்தின் உள்ளடக்கத்தோடு தொடர்பு உடைய ஒரு விடயமே ஆகும்,

செய்திகளைச் சொல்லாத இலக்கியம் உலகில் எதுவும் இல்லை. ஓர் இலக்கியப் படைப்பை வாசிக்கும் ஒரு வாசகன் அப்படைப்பில் இருந்து ஏதோ ஒரு வகையில் சில கருத்துக்களைப் பெறவே செய்கின்றான். இவ்வாறு வாசகன் பெறும் கருத்துக்களுக்கு சமூக ரீதியில் சில பெறுமானங்கள் இருப்பதும் தவிர்க்கப்பட முடியாதவொன்று. ''என்னுடைய இலக்கிய ஆக்கத்தின் நோக்கம் வாசகனிடம் கருத்துக்களை பிரச்சாரம் செய்வது அல்ல. நான் எனக்கு ஏற்பட்ட கலை உணர்வின் வேதனையை படைப்பாக பிரசவித்தேன்'' என ஓர் இலட்சியப்படைப்பின் படைப்பாளி கூறலாம். குறிப்பிட்ட படைப்பாளியைப் பொறுத்தவரை அவர் கூறும் கருத்து அவருடைய உள்ளத்தின் உண்மைக் கருத்தாகவும் இருக்கலாம். ஆனால் அவரின் படைப்பை வாசிக்கும் ஒரு வாசகனுக்கு அப்படைப்பு சிலகருத்துக்களைக் கொடுப்பதை படைப்பாளி தடுக்க முடியாது. அந்த வகையில் அவரின் படைப்பும் கருத்துப் பிரசாரம் செய்தே தீர்கின்றது. எனவே பிரச்சாரம் இல்லாத இலக்கியப் படைப்பு உலகில் இல்லை எனலாம்.

(தொடர்ச்சி 28ம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 8



# சந்தனச் சிதறல்கள்

கோகிலா மகேந்திரன்

எங்கோ வெகு தொலை தூரத்தில் ஆரவாரிக்கும் நாய்கள்! அவற்றுடனே கலைந்து போகிற மனம்!

அன்று அவளிடம் இறுதியாக விடை பெற்றுக்கொண்டவன் 'கிருப்ஸ்' தான்.

''உம்மடை அடுத்த'பேர்த்டே'க்கு நாங்கள் இன்னும் நெருக்கமாக வேணும்' என்று சொல்லி ஒரு அழகான சந்தனச் சிலையை அன்பளிப்பாகக் கொடுத்து அவன் விடை பெற்றான்.

அப்போதுஅங்கே ஒருவரும் இல்லை.

அவனது கண்களில் இருந்த எதிர்ப்பார்ப்பை, அன்றைய மாலைமழைத்துளியில் நனைந்த பூக்கள், இலைகள், கொடிகள், மேசையில் இருந்த ஒரு செயற்கைப் பூச்சாடி, வெளி வராந்தா மூலையில் ஒதுங்கி இருந்த ஒரு பூனை இவை பார்த்திருக்கலாம்.

விளையாட்டுகள், படமெடுப்புகள், அன்பளிப்புகள், விடை கொடுத்தல்கள் எல்லாம் முடிந்து மேரி உடுப்பை மாற்றி ''நைற் கவுண்'' அணிந்து கொண்டு படுக்கைக்குப்போக ஆயத்தமாகும் போது இரவு ஒன்பது மணி இருக்கும்.

வெளியில் வந்து எட்டிப் பார்த்தாள் மேரி, கிறிஸ்ரோபர் தான்!

என்ன பிறவி இவன்! மாலை நாலு மணிக்கு விழா என்று அழைப்பு கொடுத்தால் இரவு ஒன்பது மணிக்கு வருகிறான்!

''ஹலோ...கிறிஸ்ரோபர்... கம் இன்...''

''மெனி ஹப்பி றிரேண்ஸ்''

''தாங்க்யூ - ஏன் நீங்கள் ஈவினிங் வரேல்லை?''

''வந்திருந்தால் வேஸ்ற் ஒஃப் ரைம்...''

பெண்களைப்போல நிலத்தைப் பார்த்துக் கொண்டே கதைத்தான் - ''இப்ப...?''

''இப்ப... எனக்குப் படிச்சதை ரீ கோல் பண்ணிற நேரம். அப்படியே நினைச்சுப் பாத்துக் கொண்டு சைக்கிளிலை ஏறி வந்தன் ஜஸ்ற் ரென் மினிற்ஸ். அடுத்த செக்ஸன் படிக்க நைன் தேர்ட்டிக்குத் தொடங்க வேணும்... கெதியாப் போக வேணும்...''

தனிமையில் அவளுடன் கதைக்க அவன் மிகவும் கஷ்டப்படுவது தெரிந்தது. அண்ணாவும் வந்து அமர்ந்தபோது கொஞ்சம் தளர்ந்து காணப்பட்டான்.

''நீங்கள் மற்றவை எல்லாரிலுமிருந்து வித்தியாசம்...''

''இல்லை, நான் சாதாரண மனிதன் தான். நேரத்தைப் பயனுள்ளதாய்ச் செலவழிக்க வேணும். இப்ப நீங்கள் ஆஸ்பத்திரியிலை வருத்தமாயிருந்தா...ஓஃப்கோஸ் நான் வந்து படிக்கிற நேரத்திலையும் ஹெல்ப் பண்ணலாம். இது ''பேர்த்டே பார்ட்டி'', நொன் சென்ஸ்...''

''உங்களிட்டை உண்மையான கிறீஸ்தவப் பண்புகள் நல்லா ஊறின மாதிரி இருக்கு...'' என்றான் அண்ணா.

மேரியால் அதை எளிதில் ஏற்றுக் கொள்ள முடியாமல் இருந்தது.

''நீங்கள் கேள்ஸ் ஓடை கதைக்கிறதே குறைவு. பிறகு ஆஸ்பத்திரியிலை இருந்தா எங்கை வரப் போறீங்கள்?'' என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொடர்கதை

''நோ, நீங்கள் என்னைப் பிழையா விளங்கியிருக்கிறியள். நான் சாதாரண மனிதன்தான். நான் யாரோடையும் கதைப்பன். தேவை இருந்தா...''

''அப்ப... நான் படிக்கிறதுக்கு உங்களோடை டிஸ்கஸன் குரூப் சேரலாமா?

''ஓ... யெஸ்... தாராளமா ஆனால் ஒண்டு... நான் முழுதும் சொல்ல நீங்கள் சும்மா கேட்டுக் கொண்டிருக்கிற ஆளா இருக்கப்பிடாது. நீங்களும் படிச்சுக் கொண்டு வர வேணும். ரீ கோல் பண்ணலாம்.டிஸ்கஸ் பண்ணலாம்''

,' எப்ப தொடக்கம் படிப்பம்? ''

''நாளைக்கே... ஈவினிங்...',

''தைற்...தாங்க் யூ வெரி மச்...''

''சரி,அப்ப நேரம் போயிட்டுது. நான் வரப்போறன்''

''என்ன நீங்கள்...வந்திட்டு... கேக் கூடச் சாப்பிடாமல்...''

''பரவாயில்லை, அது அவ்வளவு முக்கியமில்லை'' என்று அவன் சொல்வதைக் கவனிக்காமலே அவள் அவசரமாய் எழுந்து உள்ளே சென்ருள்.

அவள் திரும்பி வருவதற்கிடையில், மேரி அமர்ந்திருந்த கதிரையில் ஊசி ஒன்றை ஏற்றி வைக்கிருன் கிரிஸ்ரோபர்.

''கேக் மட்டு மெண்டாலும் சாப்பிடுங்கோ...'' அவள் கொணர்ந்து நீட்டும் கேக்கைச் சாப்பிடுகிருன்.

நண்பர்கள் பலரும் கொண்டு வந்த அன்பளிப்புகளை எடுப்பதற்காக அவள் உள்ளேபோக முயலும்போது

''நோ... பரவாயில்லை. இருங்கோ... கதைப்பம்...'' என்கிருன். அவள் அதைக் கவனிக்காமலே உள்ளே சென்று கிருப்ஸ் கொடுத்த சந்தனச் சிலையை மட்டும் எடுத்துக் கொண்டு திரும்ப வருகிருள்.

''கிருப்ஸ் இப்படித் தரத்தானே வேணும் உங்களுக்கு'' என்று அவசரமாய்ச் சொல்லி விட்டு விரைந்து வெளியேறி விடுகிருன் கிரிஸ்ரோபர்.

வானம் ஒரு பக்கம் கறுத்து மறுபக்கம் ஒரே ஒளி வெள்ளம் பாய்ச்சிக்கொண்டு கோலம் செய்கிறது. மாலை நேரந்தான்!

வாகை மரத்தின் கீழ் போடப்பட்டிருந்த சீமெந்து பெஞ்சில் அமர்ந்திருக்கும் மேரி கேட்கிருள்.

''எனக்கு யூரினரி சிஸ்ரத்திலை இரண்டு மூண்டு டவுற்ஸ் இருக்கு''

''கேளுங்கோ''

இவர்கள் இருவரும் வாகை மரத்தின் கீழ் டிஸ்கஸன் செய்வதை எப்படியோ அவதானித்து விட்டராமும் இவர்களுக்கு அருகில் வந்து அமர்ந்து கொள்கிருன் - வெறும் பார்வையாளனுய்,இவர்களை எந்த வகையிலும் குழப்பாமல்,

''ஒன்று தசம் ஐந்து சதுர மீற்றர் உடற்பரப்பையுடைய ஒரு சாதாரண மனிதனின் இரண்டு சிறு நீரகங்களினதும் கலன் கோள வடித்தலின் வேகம்... இதுக்கு நாலு மறுமொழி குடுத்திருக்கினம்...''

என்று மேரி ஆரம்பிக்க முதலே கிரிஸ்ரோபர் படாரென்று ''அட கடவுளே... இது கூட உங்களுக்குத் தெரியாதே? உங்களைக் கர்த்தர் தான் காப்பாற்ற வேணும். இது நேரடியான கேள்வி எந்தப் புத்தகத்திலையும் இதுக்கு மறுமொழி இருக்கும் கிட்டத்தட்ட நூற்றிப்பத்து மில்லி லீற்றர்... நிமிஷத்துக்கு நீங்கள் இதுக்கெல்லாம் என்ரை நேரத்தை மினக்கெடுத்த ஏலாது'' என்று பாய்ந்தான்.

அவன் பதில் சொன்ன முறையில் டீரென்று எழுந்து போய்விடுவான் போல இருந்தது.

ராம் வேறு இவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கிருன். டங் - டங்கென்று மண்டையில் விழுவது போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சொற்கள்... மென்மையான குரலில் சொல்லப்பட்டாலும் கூட...மேரியின்முகம் ஆழ்ந்து இறுகுகிறது அதைக் கவனித்த கிறிஸ்ரோபர் சமாளிக்கும் தோரணையில்,

''ஆல் றைற்... அடுத்த கேள்வி என்ன?'' என்று கேட்டான்.

''ஒவ்வொரு சிறு நீரகத்திலும் காணப்படுகின்ற ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட சிறுநீரகங்களில் ஒரு சிறு தொகை மட்டுமே ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இயங்கும்... இந்த வாக்கியம் ஒரு...

(i) அவதானிக்கப்பட்ட உண்மை

(ii) சரியான முடிவு

(iii) காரணமற்ற ஊகம்

(iv) மேற்கூறிய எதுவுமில்லை.

ஆங்கிலத்திலேயே அமைந்திருந்த அந்தக் கேள்வியை மீண்டும் ஒருமுறை வாசிக்கச் சொல்லி அவதானிக்கிறான் கிறிஸ்ரோபர். பிறகு, ''நீங்கள் என்ன நினைக்கிறியள்?'' என்று கேட்கிறான்.

''இது ஒரு நியாயமான ஊகமாய் இருக்கலாம் என்ன?'' என்று கேட்கிறாள் மேரி.

''ஆ - யெஸ் - அப்ப... நன் ஒஃத எபவ் தான் விடை என்ன?' என்று கிறிஸ்ரோபர் சொல்லும்போது, மேரியின் கண்கள் தான் சொன்னது சரியென்று தெரிந்து பிரகாசமடைகின்றன.

திடீரென்று வெளியே எதுவோ அறிவிக்கப்படுவதான சத்தம் தொலைவில் கேட்கிறது. மூவரும் கூர்ந்து கவனிக்கின்றனர்.

போராளிகளினால் பிறப்பிக்கப்படும் ஊரடங்குச் சட்டம் உடனடியாக அமுலுக்கு வருவதாக இந்த ஒலிபெருக்கி அறிவிப்புச் சொல்கிறது.

''முதல் முறையாக... பெடியள் கேர்ஃபியூ போடுறாங்கள் என்ன பிரச்சனையோ தெரியவில்லை. நாங்கள் போறது தான் நல்லது'' என்கிறான் ராம்.

கிறிஸ்ரோபர் தன் சப்பாத்துக் கால்களால் மேரியின் கால்களை உழக்கி அடித்துக் கொண்டு ஓடுகிறான். மேரியின் முகத்தில் வேதனைக்கோடுகள் பரவுவதை அவன் அவதானித்ததாய்த் தெரியவில்லை.

ராம் தான் மேரியை பஸ் தரிப்பு வரை கூட்டி வருகிறான்.

கிறிஸ்ரோபருக்குப் 'பொழுதுபோக்கு' ஒன்றுமில்லையா என்று ராமிடம் கேட்கிறாள் மேரி. அப்போது அவன் சொல்லும் பதில் சுவாரசியமாய் இருக்கிறது.

''தனக்குப் பூமி நடுக்கம் அல்லது காளைச்சண்டை அல்லது கோழிச்சண்டை பார்க்கிற தென்டால் நல்ல விருப்பம் எண்டு ஒருநாள் கிறிஸ்ரோபர் எனக்குச் சொன்னவன். அதோடை ஹொஸ்பிட்டலிலை காயக்கார வாட்டிலை இருக்கிற நோயாளிகளைப் பார்க்கவும் தனக்கு விருப்பமாம். இப்ப யாழ்ப்பாணத்திலை காளைச்சண்டை நடக்கிறதில்லை. பழைய தமிழ் நாட்டு மரபுகளை நாங்கள் அழிய விட்டிட்டம் எண்டு அவனுக்குப் பெரிய கவலை...'

ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதால் யன்னல்களில் முந்திரிக்குலைபோல் பிதுங்கி வழியும் கூட்டத்துடன் வந்த மினிபஸ் ஒன்றில் மேரி ஏறிக்கொண்டாள்.

**(தொடரும்)**

## பரிசு பெற்றோர்கள்

நோர்வே தமிழ்ச்சங்கம் நடாத்திய சிறுகதை — கவிதைப் போட்டிகளில் எம்மவர்களும் பரிசு பெற்றார்கள்.

சிறுகதை : திருமதி கோகிலா மகேந்திரன்
முதலாம் பரிசு ரூ. 3000/-

திரு. செ. குணரத்தினம்
ஆறுதல் பரிசு ரூ. 200/-

திரு. ஜோன் இராஜன்
ஆறுதல் பரிசு ரூ. 200/-

கவிதை : திரு. செ. குணரத்தினம்
ஆறுதல் பரிசு ரூ. 200/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

(24ம் பக்கத் தொடர்ச்சி)

சிலர் கருத்துப் பிரச்சாரம் இலக்கியத்தின் தரத்திற்கு ஊறு விளைவிக்கும் என்பர். இது ஒரு பொருதமற்ற கூற்று. காரணம் உலகின் எல்லா இலக்கியமும் கருத்துக்களை பிரச்சாரம் செய்தே தீர்க்கின்றன என்பது உண்மையாகும் பொழுது பிரச்சாரம் செய்யும் இலக்கியம் பிரச்சாரம் செய்யாத இலக்கியம் என இலக்கியத்தை இக்கூற்று பாகுபடுத்தப் பார்க்கின்றது. இது ஏற்க முடியாததொன்று. மேலும் பேராசிரியர் கைலாசபதி அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல் இது நிரூபிக்கப்படாத ஓர் கூற்றுமாகும். தமிழ் இலக்கிய உலகில் இருந்தே இதற்கு நாம் உதாரணத்தைக் காணலாம். தமிழின் இரட்டைக் காப்பியங்கள் எனக் கூறப்படும் சிலப்பதிகாரத்தையும், மணிமேகலையையும் எடுத்துக்கொள்வோம். இவ் இரண்டுமே பிரச்சார நோக்கத்திற்காக எழுதப்பட்ட நூல்கள் ஆகும். முதல் நூல் சமணசமயக் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்ய எழுந்த நூலாயின் இரண்டாம் நூல் பௌத்தசமயக் கருத்துக்களை பிரசாரம் செய்ய எழுந்த நூல். சிலப்பதிகாரத்தின் நூலாசிரியர் தனது நூலாக்க நோக்கத்தைக் கூறுகையில் அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றுவது, உரைசால் பெண்டிரை உயர்ந்தோர் ஏற்றலும், ஊழ்வினை வந்துறுத்தும் என்பதும் ஆகிய மூன்று விடயத்தை நிலை நிறுத்தவே தாம் தம் நூலைப் பாடியதாகக் கூறி தன் பிரச்சார நோக்கை தெளிவாகவே முன்வைத்து விடுகின்றார். இவ்வாறு மூன்று கருத்துக்களை பிரச்சாரம் செய்யும் நோக்கில் பாடப்பட்ட சிலப்பதிகாரச் செய்யுட்களை நாம் இலக்கியத்தரம் இல்லை என்று ஒதுக்கி விடத்தான் முடியுமா? அதே சமயத்தில் பௌத்தக்கருத்துக்களை பிரச்சாரம் செய்ய எழுந்த மணிமேகலையை நாம் சிலப்பதிகாரத்தின் இலக்கியத் தரத்தோடு ஒப்பிடுகையில் அந்நூல் இலக்கியத்தரத்தில் வறிதாகவே காணப்படுகிறது. ஆக இரு நூல்களுமே கருத்துப்பிரசாரம் செய்யும் நூல்களாய் இருப்பினும் ஒன்று இலக்கியத் தரத்தில் உயர்ந்தும், மற்றயது தாழ்ந்தும் இருக்கக் காரணம் பிரச்சாரம் அல்ல. பதிலாக இலக்கியத்தை சிருஷ்டிக்கும் இலக்கியயவாதியின் இலக்கிய ஆற்றலைச் சார்ந்த ஓர் விடயமாக அது அமைகின்றது. எனவே கருத்துப் பிரச்சாரம் இலக்கியத்தரத்தை ஊறு செய்யும் என்ற கூற்று எவ்வகையிலும் பொருத்தமற்ற கூற்றாகவே காணப்படுகின்றது.

இதுவரை உள்ளடக்கம் தொடர்பான முக்கிய அம்சங்களைப் பார்த்தோம். இதற்கு மேலும் கூட உள்ளடக்கம் தொடர்பாய் பார்க்க விடயங்கள் இருந்தாலும் இதுவரை பார்த்த விடயங்கள் அடிப்படையானவை எனலாம்.

**க. யோகநாதன்** B. A. (Hons.)

## இலங்கை இலக்கியப் பேரவை பரிசு நூல்கள், 1987, 1988

*1987, 1988ம் ஆண்டுகளில் வெளிவந்த இலக்கிய நூல்களுக்கான பரிசளிப்பு இவ்வாண்டு (1989) சித்திரை மாதத்தில் நடைபெறவுள்ளது. ஆதலால் ஆக்கவிலக்கிய கர்த்தாக்கள் தாம் குறித்த ஆண்டுகளில் வெளியிட்ட ஆக்கவிலக்கிய நூல்களில் ஒவ்வொரு பிரதியை அனுப்பிவைக்குமாறு தயவாக வேண்டப்படுகிறார்கள்.*

*அனுப்பவேண்டிய முகவரி :*

செயலாளர், இலங்கை இலக்கியப் பேரவை
*பிறவுண் வீதி, நீராவியடி,*
*யாழ்ப்பாணம்.*

*குறிப்பு :* 1. பரிசுத் தொகை ரூ. 1000/-
2. நூல் வகை : இலக்கிய ஆய்வு, நாவல், சிறுகதைத் தொகுதி, கவிதைத் தொகுதி, காவியம், நாடகம், சிறுவர் இலக்கியம்.

*தகவல்:* இரா. நாகலிங்கம் (அன்புமணி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விவிலியப் புதிர் - 7

இயேசுவின் பாடுகள், இறப்பு, உயிர்ப்பு ஆகிய நிகழ்ச்சிகளோடு தொடர்புடைய சில முக்கிய மனிதர்களைப்பற்றி நான்கு நற்செய்தியாளர்களும் குறிப்பிட்டுள்ளனர். அத்தகையவர்களை இனங்கண்டு கொள்ளக்கூடிய சில அடைமொழிகளை கீழே தருகின்றோம். அவர்கள் யார் என்பதைக் கண்டு பிடித்து நிரப்பி அனுப்புங்கள்.

1. அவவிசுவாசம் கொண்ட அப்போஸ்தலர்: ..........
2. ஆடையைக் கிழித்தவர்: ..........
3. காது அறுபட்டவர்: ..........
4. கை கழுவியவர்: ..........
5. இயேசுவின் மார்பில் சாய்ந்திருந்தவர்: ..........
6. கல்லறையைக் கொடுத்தவர்: ..........
7. வாளை உருவியவர்: ..........
8. பேர்போன கைதி: ..........
9. உயிர்த்த இயேசுவை முதலில் கண்ட பெண்: ..........
10. முத்தமிட்டவர்: ..........

பெயர்: ..........

முகவரி: ..........

..........

**பரிசு: ரூபா 50/-, 25/-** **முடிவுத் திகதி: 31-03-89**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## விவிலியப் புதிர் - 5
## முடிவுகள்

1. எரேமியாஸ்
2. யோனாஸ்
3. எசேக்கியேல்
4. யோவேல்
5. எலியாஸ்
6. ஆமோஸ்
7. எலிசேயு
8. தானியேல்
9. ஓசேயா
10. இசையாஸ்

## பரிசு பெறுவோர்:

**1ம் பரிசு:**

**ஷர்மிலா சாந்தரூபி**
வீச்சுக்கல்முனை
மட்டக்களப்பு.

**2ம் பரிசு:**

**செல்வி. யாழினி லோறன்ஸ்**
இல. 9, மேரி ஒழுங்கை
ஊறணி
மட்டக்களப்பு.

## பாராட்டுப் பெறுவோர்:

1. **யூடி ஜோண்**
29, புதிய வன்னியனார் வீதி,
மட்டக்களப்பு.
2. **S. ஜோண் தேவதாஸ்**
322, துறை நீலாவணை - 6.
3. **செல்வி. ஞானசெல்வி செல்லையா**
பிரதான வீதி, வந்தாறுமூலை.
4. **S. நிர்மலராஜ்**
10, புனித மிக்கேல் வீதி,
மட்டக்களப்பு.
5. **பெ. மேரி மிசியம்மா சோசை**
ஜெசிமா ஹவுஸ், 9ம் வட்டாரம்
வங்காலை.

மட்டக்களப்பு மறைமாவட்ட

## கத்தோலிக்க மறை ஆசிரியர் ஒன்றியத்தின் 1989ம் ஆண்டுக்கான முதல் அமர்வு

மட்டக்களப்பு மறைக்கோட்ட, கத்தோலிக்க மறையாசிரியர் ஒன்றியத்தின் 1989ம் ஆண்டுக்கான முதல் அமர்வு ஜனவரித் திங்கள் 7ம் நாள் (7-1-89) சனி காலை 9.15 மணிக்கு ஆயர் இல்ல சாள்ஸ் மண்டபத்தில் மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்தந்தை ஏ. தேவதாசன் அடிகள் தலைமையில் ஆரம்பமாகியது. சுமார் 40 கத்தோலிக்க மறையாசிரியர்கள் சமூகமளித்தனர். முன்னைநாள் மறைக்கல்வி இயக்குனராகப் பணியாற்றிய அருட்தந்தை டி. சாமிநாதன் அடிகளார், ''பொது நிலையினரில் குறிப்பாக கத்தோலிக்க ஆசிரியர்களின் பணியும் சான்று வாழ்வும்'' என்ற தலைப்பில் சிறப்புரை வழங்கினார். பங்குபற்றிய கத்தோலிக்க மறையாசிரியர்கள், 5 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு இருபது வினாக்கள் பற்றி குழு ரீதியில் கலந்துரையாடினர். மறையாசிரியர் திரு. கே. யேசுராசா அவர்கள் மனித மைய மறைக்கல்வி பற்றி - அனுபவ ரீதியில் உரை நிகழ்த்தினார். ஈற்றில் இவ்வாண்டுக்கான புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

தலைவர்; மறைக்கல்வி இயக்குனர்
அருட்திரு. ஏ. தேவதாசன்

ஞான ஆலோசகர்:
அருட்செல்வி டன்ஸ்ரன் H. F.

பரீட்சைச் செயலாளர்:
அருட்செல்வர் ஸ்ரீபன் மத்தியூ S. S. J.

செயலாளர்: இருதயநாதன்

உதவிச் செயலாளர்: பற்றிமா பிரான்சிஸ்

பொருளர்: பிலமின் ஜோசேப்

நிர்வாக சபை உறுப்பினர்கள்:
திரு. ஏ. ஜே. ஞானப்பிரகாசம்
திரு. அலெக்சாந்தர்
செல்வி வயலட்
செல்வன் ஜே. ஜெயக்குமார்
செல்வன் புறூஜே டிக்கோனிங்.

தகவல்:
ஏ. ஜே. ஞானப்பிரகாசம்
மறைக்கல்வி நடுநிலையம்,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உங்கள் பக்கம்

## கரு புதிது

முப்பது வெள்ளிக்காசுகள் என்ற சிறு கதையைப் படித்தேன். இதனை மலையாள மொழியில் எழுதிய ரிஷி ஜோனுக்கும், தமிழில் தந்த வீ. ஆனந்தனுக்கும் எனது பாராட்டுக்கள். காதல், அல்லது நாட்டுப் பிரச்சினை என்ற வழமையான போக்குகளிலிருந்து இக்கதை மாறுபட்டிருந்தது.

செல்வி மேபிள் மாட்டின்
சொறிக்கல்முனை.

## மறவாதீர்!

தொண்டன் முழுமையாக இலக்கிய இதழாக மாறிவிடுவானோ என்று அஞ்சவேண்டியுள்ளது. காரணம் அதில் இடம்பெறும் கட்டுரைகள் எல்லாம் இலக்கிய சம்பந்தமாகவே உள்ளன. இது ஒரு கத்தோலிக்க சஞ்சிகை என்பதையாவது தொண்டன் மறவாமல் இருந்தால் நல்லது.

(அநாவசிய அச்சங்கள் வேண்டாம். கொஞ்சம் ஆசிநீர் தெளித்துக்கொள்ளுங்கள். தொண்டன் எப்போதும் கிறிஸ்தவ — இலக்கியச் சஞ்சிகை தான்) - இ. ஆ.

அ. ஸ்ரெலா பாரதி
தாழங்குடா.

## பாராட்டு

கிறீஸ்தவர்கள் செய்த இலக்கியப் பணிகளை அறியத்தந்த தொண்டனுக்கு எமது பாராட்டுக்கள். நிலா தமிழின் தாசனின் நீயே இறைவனின் ஆலயம்' கவிதை வெகு ஜோர்.

அருள் யோகரத்தினம்
அம்பாறை.

## சிறுகதை நன்று!

'முப்பது வெள்ளிக்காசுகள்' சிறுகதை மிக நன்றாக இருந்தது. மொழி பெயர்த்துத் தந்த ஆனந்தனுக்குப் பாராட்டுக்கள்.

M L. சுதா
மட்டக்களப்பு.

(முப்பது வெள்ளிக்காசுகள் சிறுகதையைப் பாராட்டி பல நேயர்கள் மடல்கள் வரைந்திருந்தனர். இதனை மலையாள மொழிலிருந்து மொழிபெயர்த்து எமக்கு அளித்த திரு. வீ. ஆனந்தன் அவர்களுக்கு எம் நன்றியைக் கூறிக்கொள்கிறோம். அத்துடன் மேலும் பல தரமான படைப்புக்களை மலையாள மொழியிலிருந்து மொழி பெயர்த்து தமிழ் வாசகர்களும் நுகரச் செய்யவேண்டுமென்று அன்பான வேண்டுகோள் விடுக்கிறோம்)

- இ. ஆ

## இப்படிச் செய்தால் என்ன?

தொண்டனில் வெளிவரும் விவிலியப் புதிர் போட்டிக் கூப்பனை வேறாக ஒரு தாளில் அச்சிட்டு சஞ்சிகைக்குள் வைத்து அனுப்பினால் என்ன? நீங்கள் அச்சிட்ட கூப்பனை வெட்டி எடுத்தவுடன் அதன் பின்பக்கம் உள்ள சில ஆக்கங்கள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் அதனுடன் வந்துவிடுகிறது.

வின்மினி
இருதயபுரம், மட்டக்களப்பு.

(ஆக்கங்கள் எதையும் போட்டிக் கூப்பனில் நாம் அச்சிடுவதில்லையே அம்மணி! சரி நீங்கள் சொல்வதுபோல் வேறாக அச்சிட்டு வைக்கலாந்தான். அச்சகக்காரர்கள் இனாமாகாத் தரமாட்டார்களாமே! அது மட்டுமல்ல இம்மாதத்திலிருந்து தொண்டனுக்கான அச்சுச் செலவு பிரதி ஒன்றுக்கு எழுபது சதத்தால் திடுதிப்பென்று கூடிவிட்டது. என்ன செய்வது என்று தெரியாமல் திண்டாடுகிறோம். நீங்கள் வேறு வயிற்றெரிச்சலைக் கிளப்பாதீர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Registered as a News Paper in Sri Lanka.

எம்மிடம் சுத்தமான நல்லெண்ணெய்
மற்றும் சில்லறைச் சாமான்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
மற்றும் தினசரிகள் வார - மாத
சஞ்சிகைகள், வெளியீடுகள்
எம்மிடம் விற்பனைக்கு உண்டு

## கலைச்செல்வி
## ஸ்டோர்ஸ்

உரிமையாளர்: K. சங்கரப்பிள்ளை

இல. 1, முனை வீதி,
மட்டக்களப்பு.

தரமான 22 கரட் தங்க
நகைகளை குறித்த தவணையில்
கைதேர்ந்த வேலைப்பாடுகளுடன்
நவநாகரீக டிசைன்களில்
பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்

## லலிதா
## நகை மாளிகை

இல. 17/2, முனை வீதி,
மட்டக்களப்பு.

தொலைபேசி: 065 - 2947

## MURUGESU & BROS

35, Central Road,
BATTICALOA.

Dealers in:
Groceries Oilman Goods.

Stockist for:
British Ceylon Corporation Ltd.
Ceylon Tobacco Company Ltd.
Ceylon Nutritional Foods Ltd.

Agents for:
Express Newspaper of Ceylon Ltd.

T'phone: 065-2319
Residence: 065-2534

ஆராதனாஸ்

## NEW AARADANAS

EXPERT DRESS MAKERS

20, CENTRAL ROAD,

BATTICALOA.

இச்சஞ்சிகை, மட்டக்களப்பு ஜெஸ்கொம் அச்சகத்தில் அச்சிட்டு,
தொண்டன் ஆசிரியர் குழுவினரால், 1989-03-02ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media